Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 27 (30.05.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 238

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

# செயற்படுத்த முடியாத விடயங்கள் வலியுறுத்தப்படுகிறது; அரசு சட்டத்துக்கு அமையவே நடக்கவேண்டியுள்ளது!

## சமாதானப் பேச்சுக்களின் நிலை குறித்து பிரதமர் ரணில் பேச்சு



(கொழும்பு)

நாம் இன்று ஒரு முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளோம். இலகுவில் செயற்படுத்தமுடியாத விடயங்களே வலியுறுத்தப்படுகின்றன. இதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை, விடுதலைப் புலிகள் புரிந்துகொள்ளவேண்டும். வலியுறுத்துவது வேறு - அதைச் செயற்படுத்துவது இலகுவான விடயமல்ல. அரசு, சட்டதிட்டத்துக்கு அமைவாகவே நடக்கவேண்டியுள்ளது என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

தற்போதைய பேச்சுவார்த்தைகளின் நிலைப்பாடு மற்றும் இதற்கு முன்னான நிலைமைகள் குறித்து, அவர் நேற்று கொழும்பு 'தாஜ் சமுத்திரா' ஹோட்டேலில் - 'ஆசிய விடுதலை ஜனநாயகவாதிகள் சபை' உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில் -

யுத்தம் எமது நாட்டை ஒரு குருடன் போலாக்கிவிட்டது. தடுமாற்றத்துடன், அதிர்ச்சியடைந்து எமக்கு என்ன நேர்ந்துவிட்டதென்பதை கிரகிப்பதற்கு வேண்டிய ஒளியைத் தேடி எம்மைத் தத்தளிக்க வைத்துள்ளது. விடுதலைப் புலிகளானாலும் சரி, ஒரு அமைச்சரானாலும் சரி, ஒரு சாதாரண பிரஜையானாலும் சரி, இந்தப் பயங்கரக் கனவில் இருந்து விடுபட எல்லோரும் விரும்புகிறோம்.

இதற்கான ஒரு தருணம் 1980களின் பிற்பகுதியில் எமக்கு கிடைத்துவிட்டதுபோல் தோன்றியது. மீண்டும் இந்நிலை 1990 இல் இறுதி

(9 ஆம் பக்கம் பார்க்க)

# அரசினது யோசனைக்கான பதில் நாளைக்குள் புலிகள் அனுப்புவர்

## அதிகாரம் குறைந்த அமைப்புக்கே அரசு ஆலோசனை

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசு அனுப்பிவைத்துள்ள யோசனைக்கான விடுதலைப் புலிகளின் பதில் - இன்று மாலை அல்லது நாளை காலை அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.**

இதேவேளை - இடைக்கால நிர்வாகம் குறித்து, அரசு அனுப்பியுள்ள யோசனைகளின்படி - அந்த இடைக்கால அமைப்பினால் - ஆலோசனைகளை வழங்குவதும், முன்னுரிமை விடயங்களை இனங்காண்பதும், திட்டங்களை கண்காணிப்பதும் ஆகிய, அதிகாரம் குறைந்த விடயங்களையே கையாளக்கூடியதாக இருக்கும்.

விடயங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் எதுவும், அந்த அமைப்புக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இறுதித் தீர்வு எட்டப்படும் வரையில் இந்த அதிகார அமைப்பே இடைக்கால நிர்வாக அமைப்பாக இருக்குமெனவும் அரசின் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபாவின் பெற்றோர் நாடு திரும்புகின்றனர்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெற்றோர், திருச்சியிலிருந்து இலங்கை திரும்புகின்றனர். இந்திய - மத்திய, மாநில அரசுகளினதும் இந்திய புலனாய்வுப் பிரிவினதும் அனுமதி கிடைத்ததையடுத்தே இவர்கள் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டுள்ளனர். இவர்களுடன்- கனடாவிலுள்ள பிரபாகரனின் சகோதரி விநோதினி, அவரின் கணவர் இராஜேந்திரன் ஆகியோரும்கூட வருகின்றனர். கடந்த வருடம் சுகவீனமுற்றிருந்த பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை (வயது 70) தற்போது ஓரளவு குணமடைந்துள்ளதால், அவர்களை இலங்கைக்குக் கூட்டிச்செல்லும் முகமாக, சகோதரியார் கனடாவிலிருந்து வந்துள்ளதாக சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கோட்டைப் பகுதி மின்வேலியில்

## நவக்கிரியில் முகாம் அமைப்பு;

# கோட்டைப் பகுதி மின்வேலியில் சிக்கி பசுமாடு துடிதுடித்து மரணம்!

## முறைப்பாட்டைப் பொலிஸார் ஏற்கமறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப் பகுதியில் படையினர் முகாம் அமைத்துவரும் பகுதியிலுள்ள பாதுகாப்பு வேலிக்கு பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில், பசுமாடு ஒன்று உயிரிழந்தது.

நேற்று மதியம் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், யாழ்.கொட்டடியைச் சேர்ந்த ஸ்ரீபன் என்பவருடைய பசுமாடே உயிரிழந்துள்ளது. இதனால், தமக்கு 17 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, பசுவின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இது தொடர்பாக, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச்சென்ற உரிமையாளரிடம்- இது ஒரு தற்செயலான நிகழ்வாக இருக்கலாம், எனவே - முறைப்பாட்டைப் பதிய முடியாது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களை பதிவுசெய்ய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் மோட்டார் வாகனங்கள் அனைத்தும் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டுமெனப் போக்குவரத்துப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பதிவுசெய்த ஆவணங்கள் எதுமின்றிய வாகனங்களைப் பயன்படுத்துவோர் மீது - எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



ஒரு பக்கம் பாதுகாப்பு வலயம். மற்றப் பக்கம் மின் வலயமோ...?

# நவக்கிரியில் முகாம் அமைப்பு; கண்டித்து மக்கள் போராட்டம்!

(புத்தூர்)

புத்தூர் - நவக்கிரிப் பகுதியில், இராணுவத்தினர் முகாம் அமைப்பதைக் கண்டித்து - நேற்றையதினம் அப்பகுதியில் பெரும் மறியற் போராட்டமொன்று நடைபெற்றது.

வலி.கிழக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் - பெருமளவான பொதுமக்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குகொண்டனர்.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் - கமநலசேவைத் திணைக்களம், உரக் களஞ்சியம், வரலாற்றுச் சிறப்புமிக்க நிலாவரை வற்றாத கிணறு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த முகாமைப் படையினர் அமைத்து வருகின்றனர். இந்த முகாமினால் - பிரதான வீதியின் போக்குவரத்தும், விவசாய நடவடிக்கைகளும் பெருமளவில் பாதிக்கப்படும் என்பதை வலியுறுத்தியே நேற்றைய தினம் மறியற்போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தின் முடிவில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கலந்துகொண்டதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் இராணுவத்தினர் முகாம் அமைக்க முடியாது என்றும் - அப்பகுதி இராணுவ அதிகாரியிடம் வாதிட்டார்.

மறியற் போராட்டத்தின்போது, கலகம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (சு)



போராட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.


EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891 071 349999
071 348888 074 - 512666 - 01 - 360290
(சி -913)

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாணசபை
## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### 'ஆஅவ' கடன் இல. 1846 - SRI (SF)
## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 02

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவித்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலருந்து ('ஆஅவ') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தக்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/01 | சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரில் 110'x 25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M7 | 47,000 |
| 02 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/04 | ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையில் 100'x 25' அளவுடைய மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் மீளமைத்தல், வகுப்பறைக் கட்டங்கள் புனரமைத்தல். | M7 | 49,000 |
| 03 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/06 | வடமராட்சி கிழக்கு - தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் 100'x25' அளவுடைய வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல். அதிபர் அலுவலகம் கொண்ட ஒரு கட்டடம் புனரமைத்தல். | M8 | 23,000 |
| 04 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/08ஏ | தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 130'x25' அளவுடைய வகுப்பறை மாடிக்கட்டடம் அமைத்தல். | M6 | 56,000 |
| 05 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/12 | பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் பாடசாலையில் 130'x25' இரண்டு மாடி கொண்ட கட்டடம் மீளமைத்தல். | M6 | 55,000 |
| 06 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/13ஏ | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 130'x25' இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M7 | 43,000 |
| 07 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/13பி | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 60'x30' நூலகம் மீளமைத்தல். | M8 | 20,000 |
| 08 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/17 | காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் 120'x25' அளவுடைய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M6 | 56,000 |
| 09 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/18 | காரைநகர் மெய்கண்டான் தமிழ் வித்தியாலயத்தில் 80'x20' அளவுடைய வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் திருத்துதலும். | M8 | 12,000 |
| 10 | ஜேஎவ்/நிகொட்/ஈடீ/19 | அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் 110'x25' அளவுடைய இரண்டு மாடிக் கட்டடம் மீளமைத்தலும், கட்டடங்கள் திருத்துதலும். | M7 | 41,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்வணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல்வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ('இக்டாட்' டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்பதிகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்படவேண்டும்.

IV. 'இக்டாட்' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு, ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர், மேலதிக விபரங்களை மாவட்ட பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி: 021- 222 3625
தொலைநகல்: 021- 222 5163

06. ஒப்பந்த ஆவணங்கள் மே 30 இலிருந்து ஜூன் 13 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன், பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்" த்திற்கு ஜூன் 20 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று, கச்சேரியில் ஜூன் 10 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

செ.பத்மநாதன்
தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
யாழ்.மாவட்டம்.

(சி-963)

# சமாதானத்தை விரும்பாத ஜனாதிபதி குழப்பத்தை விளைவித்து வருகின்றார்!

## குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க



நாட்டின் அபிவிருத்திக்கு உலக நாடுகள் கைகொடுத்து உதவ முன் வந்துள்ள இவ்வேளையில், சமாதானத்தைச் சீர்குலைக்கும் ஜனாதிபதியின் செயற்பாடுகளை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என, சமுர்த்தி விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கண்டி கலாசார மண்டபத்தில் - கட்சியின் நிர்வாகிகள் மத்தியில் உரையாற்றியபோதே, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

20 வருடங்களுக்கு மேலாக நீடித்த யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டை உலக நாடுகள் பலவும் வரவேற்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமாதானத்தை விரும்பாத ஜனாதிபதி சந்திரிகா, அபிவிருத்தி லொத்தர்சபையைப் பொறுப்பேற்றுக் குழப்பம் விளைவிப்பது ஜனநாயக விரோத செயலாகும்.

நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் நடைபெற்றால், அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளோம். அத்தேர்தலில் மேலதிகமாகப் பத்து ஆசனங்கள் எமக்குக் கிடைக்கும்.

ஜனாதிபதி எதையும் உரியவகையில் செய்வதில்லை. அமைச்சரவைக் கூட்டத்துக்குக்கூட அவர் தாமதமாகவே வருவார்.

தேர்தல் மூலம் மக்கள் நாடாளுமன்ற அதிகாரத்தை ஐ.தே.முன்னணியிடமே ஒப்படைத்துள்ளனர். அதிகாரம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால், ஜனாதிபதி தான் விரும்பியதையெல்லாம் செய்யமுடியாது.

தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஐ.தே.முன்னணி, 103 உறுப்பினர்களின் கையொப்பம் பெற்று ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவந்தால், ஜனாதிபதியின் கதி என்னவாகும்.

இவரது காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மோசடிகள் தொடர்பான விபரங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. அதேபோன்று கடந்த தேர்தல் சமயத்தில் தேசிய லொத்தர் சபையில் இடம்பெற்ற 40 கோடி ரூபா மோசடி தொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தனர். இந்த உண்மைகள் வெளிவரலாம் என்ற அச்சத்தினாலேயே ஜனாதிபதி லொத்தர் சபையைக் கையேற்றுள்ளாரென அவர் மேலும் தெரிவித்தார்.

# கிருஷ்ணனைப் படுகொலை செய்ய அழகிரியே நேரடியாக உத்தரவு

## தமிழக பொலிஸார் அறிக்கை

மதுரையில் தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் தா.கிருஷ்ணன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு, கலைஞர் மு.கருணாநிதியின் மகன் மு.க.அழகிரியே திட்டமிட்டதாகத் தமிழகப் பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


மு.க.அழகிரியின் நேரடி உத்தரவின் பேரிலேயே இந்தக்கொலை இடம்பெற்றது. இதற்கான திட்டங்களும் அவரது வீட்டிலேயே தீட்டப்பட்டன.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மோதல்களாலேயே இந்தப் படுகொலைக்குத் திட்டமிடப்பட்டதாகக் கூறிய தமிழகப் பொலிஸார்- படுகொலையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இப்ராஹிம், முபாரக், இக்பால் ஆகியோரைக் கைதுசெய்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, முன்னதாக - இப்படுகொலையுடன் மு.க.அழகிரிக்குச் சம்பந்தமில்லை என்று பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# புனரமைப்புப் பணிகளை நிறைவேற்றும் அமைப்பினையே புலிகள் கேட்கின்றனர்

## பிரதமர் ரணில் கூறுகின்றார்



(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றும் ஒரு அமைப்பையே விடுதலைப் புலிகள் கேட்கின்றனர். அவர்கள் இடைக்கால நிர்வாகத்தைக் கோரவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுக்களில் கருத்து ஒற்றுமை அவசியம். கருத்து ஒற்றுமை இன்றி அமைதியைக்கொண்டு வரமுடியாது. ரோக்கியோவில் திட்டமிட்டபடி உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜூன் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறும். இதில் புலிகளும் பங்குபற்றுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.




வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தால், ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் நடத்தப்பட்ட இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவத்தைப் படத்தில் காணலாம். (17)

### வட- கிழக்கு மாகாண கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றும் இப்போட்டியில் -

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய 8 மாவட்ட அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இருதரப்பும் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க முன்வரவேண்டும்!

## ஐரோப்பிய யூனியன் வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் தலைமை கேட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் இலங்கைப் பிரதிநிதியான இத்தாலியத் தூதுவர் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் -

புலிகள் ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து ஐரோப்பிய யூனியன் அதிக கரிசனை கொண்டிருப்பதாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வாய்ப்பைப் புலிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இருதரப்பும் தற்போதைய நிலையில் நெகிழ்ச்சித் தன்மையுள்ள போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அதன்மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இடைக்கால அரசியலமைப்பு கருத்தரங்கு

அமைதி முயற்சிகளின் போது, 'இடைக்கால அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப்படுவதன் அவசியமும், அதன் அனுபவங்களும்' என்ற தலைப்பிலான விசேட உரையொன்று, நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்காவிலிருந்து வருகை தரவுள்ள லியோன் வெல்ஸ் என்பவரே, மேற்படி உரையை நிகழ்த்தவுள்ளார்.

# இடைக்கால நிர்வாகத் திட்டம்; சுதந்திரக் கட்சி நிராகரிப்பு !

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிராகரித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இடைக்கால நிர்வாகம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைக்கப்படுவதை எதிர்க்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், 1995 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கும் திட்டத்துக்கும், தற்போது அரசாங்கம் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகத் திட்டத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு, ஜனநாயக வழிக்குள் திரும்பினாலேயே இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் என்று 1995 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இப்போது முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகம், புலிகளிடமிருந்து எந்த உறுதிப்பாடும் பெறப்படாமல் வழங்கப்படவிருக்கிறது.

இதனால், இடைக்கால நிர்வாகத் திட்டத்தை சுதந்திரக் கட்சியில் ஏற்கமுடியாது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன், தென் மாகாண அமைச்சர் 'சண்டி மல்லி' படுகொலைக்கும் சுதந்திரக் கட்சி கண்டனம் தெரிவித்தது.

### ஆலயத் திருப்பணி

பொலிகண்டி - இருப்பை மூலை சித்திவிநாயகர் ஆலய திருப்பணி வேலைகள், 50 லட்சம் ரூபா செலவில் நடைபெற்றுவருகின்றன. இந்த ஆலயத்தின் தேர்முட்டி, 15 லட்சம் ரூபா செலவிலும், வசந்தமண்டபம் 13 லட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய வேலைகளும் நடைபெற்று வருகின்றன என திருப்பணிச் சபை தலைவர் எஸ்.ஆறுமுகம் தெரிவித்தார்.

# லொத்தர்சபையில் எவருக்கும் நியமனம் வழங்கக்கூடாது!

## ஜனாதிபதி சந்திரிகா கண்டிப்பான உத்தரவு

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையில் தனக்குத் தெரியாமல், எந்த நியமனத்தையும் வழங்கக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலிருந்து தேசிய லொத்தர் சபையைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், மீள்செலவினங்களைத் தவிர்ந்த, ஏனைய செலவினங்களை நிறுத்துமாறும் ஜனாதிபதி சந்திரிகா தேசிய லொத்தர் சபையின் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் புதிதாக விளம்பர ஒப்பந்தங்களைச் செய்வதற்கு முன்னரும், தன்னுடன் கலந்தாலோசனை செய்தே முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# கண்காணிப்புத் தலைவரை எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு!



(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலெலவ்சனுடன் நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போதைய நிலையில், போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் நடைமுறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்தும், கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இலங்கையில் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில், மேலும் ஒன்பது கண்காணிப்பாளர்கள் அடுத்தமாதம் இலங்கைக்கு வரவுள்ளனர்.

நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒன்பது பேரே கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சுத்தம் பேணி சூழல் காத்திடுவீர்**
**சூழல் காத்து தேசம் காத்திடுவீர்!**

# லொத்தர் சபை கையேற்பு விவகாரம்; அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றது தொடர்பாக - அரசாங்கத்தின் ஆரம்ப நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையென, அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாட வேண்டுமெனத் தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதால், எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்துவைக்க வேண்டுமானால், இருவரும் கலந்துரையாடல் நடத்துவதே ஒரே வழி என்று அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு அரசியல் சாசனத்துக்கு அமையவே தீர்வு காணவேண்டும். அமைச்சரவை ஒரு கட்சியாகவும், ஜனாதிபதி இன்னொரு கட்சியிலும் இருப்பார்கள்

ஆனால், அமைச்சர்களை நியமிக்கும்போதும், அவர்களுக்கான பொறுப்புக்களைத் தீர்மானிக்கும்போதும் பிரதமருடன் கலந்துரையாட வேண்டும் எனவும் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். (01)

# கசிப்பு உற்பத்தியாளரைப் பிடிப்பதற்கு துன்னாலையில் தேடுதல் வேட்டை!

(துன்னாலை)

துன்னாலை கிழக்கு, குடவத்தைப் பகுதிகளில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களைத் தேடிப் பொலிஸார் பரவலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள பலர், முன்னர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு, கைதாகி நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டபோதும், விடுதலையாகி வந்ததும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோரைக் கைதுசெய்வதற்காக இப்பகுதியில் பொலிஸார் திடீர் தீடீரெனத் தேடுதல் வேட்டைகளை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு நடத்தப்பட்டுவரும் தேடுதல்களின்போது - பெருமளவான கோடா, ஹைக்கோ, ஈஸ்ற் மற்றும் கசிப்பு உற்பத்திக்கான பிற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், 500 முதல் 600 லீற்றர் வரையான கசிப்பும் இப்பகுதியில் அண்மைக்காலத்தில் மீட்கப்படடன.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸார், வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (12)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# படையினர் நிலைகொண்டுள்ள வீடுகள் பற்றிய விபரம் திரட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் வீடுகளின் விபரங்களை திரட்டும் பணி நாளை ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் தலைமையில் இடம்பெறும் இப்பணியில், தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகத்தில், மாவட்டச் செயலாளர் இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு - ஏறாவூரில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்மக்களின் வீடுகளில் படையினரும், பொலிஸாரும் நிலைகொண்டுள்ளனர். இராணுவம் நிலைகொண்டுள்ள வீடுகள் தொடர்பாக நாளையும், எதிர்வரும் திங்கட்கிழமையும் பொலிஸார் நிலைகொண்டுள்ள வீடுகள் தொடர்பாக விபரங்கள் திரட்டப்படவுள்ளன. (43)

# கட்டட வேலை முடிந்தும் திறக்கப்படாதுள்ள சந்தை

நெல்லியடி பொதுச்சந்தைக்கான கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும், மக்கள் பாவனைக்கு விடப்படாத நிலையிலுள்ளது.

சந்தைக் கட்டடம் அவசர அவசரமாகக் கட்டிமுடிக்கப்பட்ட போதும், பாவனைக்கு விடப்படாதது தொடர்பாக மக்கள் மிகுந்த விசனம் வெளியிட்டுள்ளனர். இதேவேளை, தற்போது இயங்கும் சந்தையில் தமக்குரிய வசதிகள் எவையும் செய்யப்படாத நிலையிலே, மிகுந்த சிரமத்தின் மத்தியில் தாம் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வியாபாரிகளும் தங்கள் விசனத்தை வெளியிட்டுள்ளனர். ஆயினும், இது தொடர்பாக உரியவர்கள் எதுவித அக்கறையும் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. (13)

# வெள்ளப்பெருக்கு சேதம் அவுஸ்திரேலியா நிதியுதவி

(கொழும்பு)

தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில், அவுஸ்திரேலிய அரசாங்கம் - இலங்கை அரசுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலக்ஸாண்டர் டவுணர் - பிரதமர் ரணிலைச் சந்தித்த சமயம் மேற்படி உதவி தொடர்பாக உறுதியளிக்கப்பட்டது.

மேற்படி உதவித் திட்டத்தின்கீழ் 4.6 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் நிதியை வழங்குவதற்கு, அவுஸ்திரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது. (200)



உடுவில் கீர்த்தனா பயிற்சி வகுப்பில் பயிற்சிபெற்று வெளியேறியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற இராமநாதன் கல்லூதி அதிபர் மங்கையர்கரசியை, ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் அழைத்துவருவதைப் படத்தில் காணலாம். (101)

## பதிவுசெய்யக் கோரிக்கை

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் கணினிப் பயிற்சிநெறி அடுத்தமாதம் ஆரம்பமாக இருப்பதால், கணினி கற்க ஆர்வமுள்ளவர்கள் - தங்களது பெயர்களை மேற்படி கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில், பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (52)

## புகைத்தல் எதிர்ப்புத் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி சமுர்த்தி அதிகார சபையினர் - புகைத்தலினால் ஏற்படும் தமையினைப் பற்றிய விளக்கத்தினை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை யாழ். குடாநாட்டில் ஓட்டியிருப்பதைக் காணமுடிகின்றது. (ரா)

## வருடாந்த பொங்கல் விழா

புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார்.

மேற்படி பொங்கல்விழாவில், வழமைபோல் தீக்குளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. (58)

## வைகாசி பொங்கல் விழா

தெல்லிப்பளை சித்தியம்புளியடி அண்ணமார் ஆலய வைகாசி விசாகப் பொங்கல்விழா நாளை அதிகாலை நடைபெறவுள்ளதுடன், விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை மற்றும் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கந்தபுராணப் படிப்பு

புலோலி மேற்கு தம்பசெட்டி மாயக்கை பிள்ளையார் கோவில் கந்தபுராண படிப்பு கடந்த 12 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது. அடுத்தமாதம் 12 ஆம் திகதி வைகாசி விசாகத்தில் வள்ளியம்மை திருக்கல்யாண படிப்பு நடைபெறும்.

சைவப்புலவர் வேதாரணிய குருக்கள் தலைமையில் கந்தபுராண படிப்பு நடைபெற்று வருகிறது. (17)

# வாழ்க வளமுடன்




HAPPY BIRTHDAY

## இரண்டாவது அகவையில்



பெயர் : யோ.மெரீன்றொசானி
முகவரி : மெரீன் பேக் ஹவுஸ், ஆனைக்கோட்டை.

## நான்காவது அகவையில்

பெயர் : சி.நிஷாயினி
முகவரி : சரசாலை வடக்கு, சாவகச்சேரி.




## ஏழாவது அகவையில்



பெயர் : சி.விதுஜா
முகவரி : மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

## ஏழாவது அகவையில்

பெயர் : நா.தனோயன்
முகவரி : வெல்வத்தை, நெல்லியடி, கரவெட்டி.



## ஒன்பதாவது அகவையில்



பெயர் : ப.மதுரா
முகவரி : 4/3, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றார் ஒப்ப..

# குடும்பச் சிக்கலைச் சமாளிக்க மனையியல் கற்பது அவசியம்!

மனையியல் பாடத்தை மாணவிகள் விரும்பிக் கற்றால் – அது எதிர்காலத்தில் குடும்பத்தை வெற்றிகரமான முறையில் வழிநடத்தவும், சிறந்த திட்டமிடுதலுக்கும், குடும்ப அமைதிக்கும், மனமகிழ்ச்சிக்கும் ஏதுவாக அமையும் என்கிறார் கொக்குவில் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய மனையியல் ஆசிரியை திருமதி மங்களேஸ்வரி தயாநிதி.

**மனைப்பொருளியல் பாடத்தை நீங்கள் விரும்பிக் கற்றதன் நோக்கம் என்ன?**

மனைப்பொருளியல் கலை அம்சம் பொருந்திய பாடம். ஏனெனில் - தையல், மனை நிர்வாகம், குழந்தைப் பராமரிப்பு, உணவு தயாரித்தல், நோயாளர் பராமரிப்பு, தாய்சேய் நலநோம்பல் போன்ற காத்திரமான விடயங்கள் இதனுள் அடங்குகின்றன.

**தற்போது மாணவர்கள் மனைப்பொருளியல் பாடத்தை விரும்பிக் கற்கிறார்களா?**

எல்லோரும் விரும்பிக் கற்பதாகக் கூறமுடியாது. கணித பாடத்தில் ஆற்றல் குறைந்த மாணவர்கள், வணிகக்கல்வியினைக் கற்கமுடியாத காரணத்தால், மனைப்பொருளியலைத் தெரிவுசெய்கிறார்கள்.

சில மாணவர்கள், மனைப் பொருளியலை விரும்பிக் கற்பதனால், அவர்களை விட்டுப் பிரியாத நண்பர்கள் அவர்களோடு சேர்ந்து கற்கவருகிறார்கள்.

மனைப்பொருளியல் பாடத்தினை நன்கு விளங்கிக்கொண்ட பெற்றோர், தமது பிள்ளைகளும் இப்பாடத்தினைக் கற்க வேண்டும் என்று விரும்புவதால், பெற்றோர் தெரிவாகவும் இப்பாடம் அமைந்துவிடுகின்றது.

வர்த்தகத்துறை, விவசாயத்துறை போன்றவை உட்பட கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்குப் போதிய ஆசிரிய வள அணியினர், சில பாடசாலைகளில் பெரும் சவாலாக அமைந்துவிடுவதனால் வேறு வழியின்றி விரும்பியோ, விரும்பாமலோ இப்பாடத்தைத் தொடரும்நிலை இற்றை வரை ஏற்படுகின்றது.

**மனைப்பொருளியல் பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்பதால், பிற்காலத்தில் எவ்வாறான சவால்களைச் சந்திக்க முடியும்?**

- பாடவிதானத்திலுள்ள, சகல பாடப் பரப்புகளிலும் உள்ள பிரிவுகளில் - அடிப்படை அறிவும், அனுபவக்கற்றலும் ஓரளவேனும் கிடைக்கின்றது.
- சிறுவயதிலிருந்து வீண் விரயங்களைத் தவிர்த்தல், சேமிப்பு பழக்கம் எதையும் உதாசீனப்படுத்தாது, ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும், செயலாற்றும் திறனைப் பெற்றிருத்தல்.
- எதிர்காலத்தில் குடும்பத்தை வெற்றிகரமாக வழிநடத்தும் திறனைப் பெற்றிருப்பதுடன் - திட்டமிடுவதற்கும், குடும்ப அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் ஏதுவாக அமையும்.
- தற்போது ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மாற்றம் காரணமாக, பல குடும்பங்களில் கணவன் - மனைவி பிரிந்து வாழும் துர்ப்பாக்கியநிலை தலையெடுத்துள்ளது. பிரிந்து வாழ்பவர்கள் தன்னம்பிக்கையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படுவதற்கு மனைப்பொருளியல் பாட அறிவு அடிப்படையாக அமைந்துவருகிறது.
- அண்மைக்காலத்தில் கூட்டுக்குடும்பங்கள் என்றநிலை மாறி, கருக்குடும்பம் (கணவன், மனைவி, பிள்ளைகள்) என்ற நிலை வெகுவாகத் தோன்றிவருவதனால், அனுபவம் வாய்ந்தவர்களிடம் இருந்து, விரிவாக அனுபவப் பாடங்களைக் கண்டு, கேட்டுப் பெறமுடியாதநிலை தோன்றியுள்ளது. இதனடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது மனைப்பொருளியல் ஒவ்வொருவருக்கும் பக்கபலமாக அமைகின்றது.

**கல்வித் திட்டத்தின்படி மனையியல் பாடத்திற்கு எவ்வாறான முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.**

- கல்வித் திட்டத்தின்படி இப்பாடத் திட்டத்திற்கு, ஓரளவேனும் முக்கியத்துவம் தற்போது கொடுக்கப்பட்டுவருகிறது. இருந்தபோதிலும், ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிகள், திணைக்களத்தினால் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்ற போதும், துறைசார்ந்த நிபுணத்துவமுடையவர்களை வரவழைப்பதில்லை.
- சேவைக்காலப் பயிற்சிகளின்போது, சில செய்முறைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டட இடவசதி இதுவரை இல்லை.
- விரல்விட்டு எண்ணக்கூடிய சில பாடசாலைகளில் சகல வசதிகளையும் கொண்ட நிலையம் இருந்தபோதிலும், அதனைப் பயன்படுத்துவதற்குப் பாடசாலை நிர்வாகம் சாட்டுப்போக்குச் சொல்லி, தட்டிவிடுகின்ற நிலைமை இருக்கிறது போலத் தெரிகிறது. இதனால், சேவைக்காலப் பயிற்சிகள் சிலவேளைகளில் விரிவுரைகளாக மட்டும் மண்டபங்களில் அமைந்துவிடுகிறது. இதனால், அனுபவமில்லாத புதிய ஆசிரியர்



மங்களேஸ்வரி தயாநிதி

களுக்கு உச்சப்பயனைப் பெறும் வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட்டு வருகிறது.

- போக்குவரத்துக்கு வசதிகொண்ட சில பாடசாலைகளுக்கு, ஆசிரிய ஆலோசகர்கள் அடிக்கடி விஜயம் செய்வதாகவும், கிராமப் புறப் பாடசாலைகளுக்கு அவ்வாறான பல முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று பல மட்டங்களிலும் பேசிக்கொள்ளுகிறார்கள். இந்த நிலை பொதுவாக எல்லாப் பாடங்களுக்கும் இருப்பதாகப் பொதுவானக் கருத்துக் கூறப்படுகிறது.

**நீங்கள் அனுபவக் கல்வியைப்பெற, பாடசாலையில் எவ்வாறான செயற்பாடுகளைச் செய்கிறீர்கள்?**

மெல்லக் கற்போர், மிகுதிறனுடைய மாணவர்கள் மற்றும் பல்வேறு சமூகச் சூழல்தாக்கங்களுக்குட்பட்ட பல தரத்து மாணவர்கள் என ஒரு வகுப்பறையில் இருப்பர். இதனால், திட்டமிட்ட நேரத்துக்குள் சில பாடப் பகுதியை முடிக்க முடியாதநிலையில் ஏனைய ஆசிரியர்கள், அதிபர் ஒத்துழைப்புடன் பாடவேளை அதிகரிக்கப்பட்டு, சகல மாணவரும் குறித்த விடயத்தில், சகல அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றன.

இதைவிட உதாரணமாக - ஒரு சிற்றுண்டி வகையொன்றைத் தயாரிக்கும்போது அதிபர், ஆசிரியர்களுக்கும், குறிப்பிடத்தக்க மாணவர்களுக்கும் அப்பண்டம் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், சிறிய இலாபம் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு இன்னொரு தேவைக்குப் பயன்படுத்துவதால் - மாணவர்களிடையே உற்சாகமும், புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது. அது எமக்கு ஆத்மதிருப்தியைத் தருகிறது.

**மனையியல் பாடத்திட்டம் கட்டாயமாக பாடத்திட்டங்களுள் உள்ளடக்கப்பட வேண்டும். மனையியல் பாடத்தைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?**

எமது நாட்டு - குடும்ப அமைப்புமுறை, வாழ்வுமுறை மேலைத்தேயத்தைப் போலல்ல. மனைப்பொருளியலைச் சகல பெண்களும் கட்டாயம் கற்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். பல குடும்பச் சிக்கல்களைச் சாதாரணமாகச் சமாளித்துக்கொள்ள இது வடிகாலாக அமைந்துவிடுகிறது. ஆண் - பெண் என்ற வேறுபாடின்றி அனைவரும் கற்கும்நிலை தோன்றினால் அதன் பலன் பன்மடங்கு.

**இறுதியாக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

- மனச்சமநிலை, ஆளுமையுடைய அதிபர எல்லோருக்கும் கிடைப்பதில்லை.
- பாடத்துக்குத் தேவையான உபகரணங்களைப் பிள்ளைகள் கையாள அதிபர், ஆசிரியர்கள் பக்கபலமாக அமையவேண்டும்.
- சகல மாணவர்களையும் சமமாக நோக்குகின்ற மனப்பக்குவம் எல்லா ஆசிரியர்களுக்கும் வரவேண்டும்.

சந்திப்பு
உஷா, கலானந்தி



# தலைவி நீ தலை நிமிர்...!


நீ தலைவியாக நடத்தும் நிறுவனத்திலோ, வீட்டிலோ உன் பேச்சுக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் உன் தலைமைத்துவத்திற்கு அத்தியாவசியம் என்பதை நீ உணர்ந்து கொண்டிருப்பாய்.

அதேவேளை, நமது சூழலில் அது எந்தளவு சாத்தியப்படுகின்றது என்பது கவலையோடு சிந்திக்கவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

வீட்டிலே அம்மா சொன்னால் அது அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய ஒரு விடயமல்ல என்ற மனப்பாங்கே பெரும்பாலான இல்லங்களில் காணப்படுகிறது. இது வழிவழியாக எமது மனங்களில் படிந்துவிட்ட ஒரு மனநிலையேயாகும்.

இதற்குப் பெருமளவு காரணம் - அப்பாமாரே. அம்மாவுக்கு ஒரு மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அவளது ஆலோசனைகளும் அத்தியாவசியமானவை. அவளது விருப்பங்களும், கட்டளைகளும் நிறைவேற்றப்பட வேண்டியவை என அப்பா கருதினால், அந்த வீட்டை அம்மா திறம்பட நடத்தமுடியும்.

அப்பா - அம்மாவின் திறமைகளை மதியாது, அவளது திறமைகளையும், தனது திறமையாக இனங்காட்டி அம்மாவை அவமரியாதை செய்து நடத்தினால், பிள்ளைகளும் அம்மாவின் சொல்லுக்கு மரியாதை தராமலே நடக்கப் பழகுவார்கள்.



அப்பா ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். வீட்டின் பெரும்பாலான பொறுப்புகள் அம்மாவிடமே இருக்கின்றன. அவளுக்கு வீட்டில் முக்கியத்துவமற்ற நிலையை உருவாக்கிவிட்டு, அவள் திறம்பட வீட்டை நிர்வகிக்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. அவரது குடும்பம் சீரழிய, அவரே காரணமாகின்றாரென்பதை அவர் உணரவேண்டும்.

அம்மா வீட்டுவேலைகளைச் செய்வதற்காக இருப்பவளல்ல. அவள் வீட்டின் தலைவி. அவள் திட்டமிட்டு, செயற்படுத்தும் விடயங்களில் சிரத்தையோடு அப்பா ஒத்துழைக்க வேண்டும்.

வீட்டில் அம்மாவை மதிக்கமறுக்கும் மனங்கொண்ட அப்பாதான் காரியாலயத்திலும், நிறுவனத்திலும் பணிபுரிகின்றார். அங்கும் ஒரு பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும்போது, அதில் குறைகாணும் மனோபாவம் இவர் போன்றோரிடம் இருக்கும்.

அண்மையில் ஒரு நிறுவனத்தில் அதன் குறைபாடுகளை நிவர்த்திசெய்து, முன்னேற்றம் காணச் செய்வது பற்றிப் பரிசீலனை செய்தபோது, அதன் தலைமைத்துவம் பெண்ணிடமிருந்து ஆணிடம் மாறவேண்டும் என்ற ஒரு கருத்துக் கூறப்பட்டது. பெண் தலைவியாக இருப்பதனால், கட்டளைகள் சரியாக நிறைவேற்றப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

'ஏன் பெண்ணின் சொல்லுக்கு மதிப்புக் குறைவு?' என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று. அவர்களிடம் கண்டிப்புக் குறைவு என்றொரு குறை கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் கண்டிப்புடன் நடந்துகொண்டாலும், அவர்களது கட்டளைகளை அலட்சியப்படுத்தும் மனோபாவம் ஆண்களிடம் காணப்படுகின்றதென்பதே உண்மையான நிலை. இந்த மனோபாவம் முன்னரைவிடத் தற்போது குறைந்திருந்தாலும் முற்றாக அகலவில்லை.

பெண் ஒரு தவறு செய்யும்போதும், 'பெண் என்பதாலேதான் அத்தவறை அவள் செய்தாள்' என்னும் கருத்துக் கூறப்படுகிறது. அதேபோன்ற தவறு ஆண்களாலும் செய்யப்படுவதை அவர்கள் மறந்துவிடுவதுதான் அதிசயம். நிர்வாகத்தில் பெண் தவறுசெய்ய நேர்ந்தாலும், இவ்வாறே கருதுகின்றனர். உண்மையில் - நீ பெண் என்பதால், தலைமைத்துவம் ஏற்கத் தகுதியற்றவள் என்று கூறப்படுவது தவறு.

உன்னிடம் தலைமைத்துவப் பண்புகள் முழுமையாக உள்ளன. அதை ஏற்க மறுப்பவர்களின் மனோபாவத்தை மாற்றவேண்டியதுதான் உன் முன்னுள்ள பிரச்சினை. நாமும் அதை மாற்ற முயலவேண்டும். காலமும் அதைப் படிப்படியாக மாற்ற உதவும்.

உனது கருத்துக்களும், ஆலாசனைகளும் அலட்சியப்படுத்தப்படும்போது - உன்மனம் வேதனைப்படவே செய்யும். உன் திறமை மதிக்கப்படாததற்கு நீ ஒரு பெண் என்பதே காரணமென்று உணர்ந்தால், நீ பொங்கியெழவே வேண்டும்.

பாதகம் செய்பவரைக் கண்டால், பயங்கொள்ளாது அவர்களை அலட்சியம் செய்துவிட்டு, நீ உன் திறமையை நிரூபிக்க முற்படு. உன் நோக்கத்தை அடைய விடாமுயற்சி செய். வெற்றி நிச்சயம் கிட்டும்.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# டேலியாஸ்



**தேவையான பொருட்கள்**

கஞ்சியிடப்பட்ட பப்பிளின் துணி - மஸ்ரட், பச்சை
றூள் - வளைந்த, பெரிய குண்டு
பஞ்சு, கட்டுக்கம்பி
Flower tape, பைண்டர்கம்

*செய்முறை*

முதலில் கஞ்சியிடப்பட்ட மஸ்ரட் துணியில் பெரிய இதழ் Cutting 2 வெட்டி எடுக்கவும். அதேபோல், சிறிய இதழ் Cutting 3 வெட்டி எடுக்கவும். பின் ஒவ்வொரு இதழின் நடுவிலும் சிறிதளவு வெட்டிய பின் இதழின் வடிவத்தில் ஒவ்வொன்றையும் வெட்டிவிடவும். பின்னர், ஒவ்வொரு இதழ்களையும் வளைந்த றூளால் றூள் பண்ணவும். றூள் பண்ணும்போது, பெரிய இதழை பெரிய குண்டால் திருப்பி, அடுத்த பக்கத்தின் நடுவில் றூள் பண்ணவும். சிறிய இதழ்கள் மூன்றையும் அதே பக்கத்தில் பெரிய குண்டால் றூள் பண்ணவும். அதன் பின், கட்டுக்கம்பியின் நுனியை வளைத்து, பஞ்சு ஒட்டியபின் அதனுடன் சேர்த்து சிறிய இதழ்கள் இரண்டையும் சேர்த்து ஒட்டவும். பின்பு, புல்லி Cutting ஐ வைத்து பச்சைத் துணியில் நடுவில் சிறிய வட்டமாக வெட்டி எடுத்தபின், பெரிய குண்டால் றூள் செய்து பூவின் அடியில் சேர்த்து ஒட்டவும். பின் கம்பிக்கு Flower tape சுற்றவும். மொட்டுச் செய்வதாயின், மேற்கூறியவாறு 3 சிறிய இதழ்களையும் ஒட்டி, புல்லியையும் ஒட்டவும். இலை செய்வதாயின், பச்சைத் துணியில் இலை Cutting ஐ வைத்து வெட்டி, கம்பிக்கு Flower tape சுற்றிக் கைக்குட்டையால் றூள் செய்யவும். இவ்வாறு செய்யப்பட்ட பூ, மொட்டு, இலை என்பவற்றை ஒரு ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி அழகானதொரு மலர்ச் செண்டினைப் பெறமுடியும்.

# ஒரு பூவின் பயணம்

*என்னைப் பார்த்தது போலவே*
*எல்லா இளைஞனையும் பார்*
*எல்லோரையும் காதல் வசப்படுத்து*
*கனவில் மிதக்கவிடு*
*மதி மயக்கு*
*விழிகளால் விளையாடு*
*"யான் பெற்ற துன்பம்*
*பெறுக இவ்வையகம்"*



குவளைக் கண்ணனின் வரிகளோடு குழந்தைமை கடக்கிறாள். எம் சின்னத் தேவதை. இதுவரை அறியாத புது உலகம் இனி அவளது. இனி அவள் குழந்தையோ, சின்னஞ்சிறுமியோ இல்லை. ஆண்களின் உலகிற்கு ஒரு அற்புதமான பரிசு அவள். அவளிடம் அன்பினை யாசிக்கும் ஆண்பிள்ளைகளின் பார்வைகளை வசீகரித்தபடி உலாவரமுடியும் அவளுக்கு. அவளை சுவாசமெனக் கொண்டதாகப் பலரைப் புலம்ப வைக்கத்தக்க பருவத்தினுள் காலடி பதித்துள்ளாள். முதன்முதலில் எதிர்ப்பாலாரின் கவர்ச்சிக்கு அவள் ஆளாகும் இப்பருவத்தில் அவள் எதிர்கொள்ளத்தக்க நெருக்கடிகள் என்ன? என்பதைச் சற்றே பார்க்கலாம்.

இன்று, நேற்றன்று தொண்டுதொட்டே இருந்து வருகின்ற வழமையே இதுவாகும். ஒரு சிறுமி பூப்படைந்த பின்னர், 'பெண்' எனுந்தகைமையைப் பெறுகிறாள். உடனடியாக அவள் இனவிருத்திக்குப் பொருத்தப்பாடடையாத போதிலும்கூட, மணவாழ்விற்கு ஏற்றவளாக அவள் சமூகத்தால் கருதப்படுகிறாள்.

போதாயன தருமசூத்திரத்தின்படி பருவமடைந்த பெண், தந்தை வீட்டில் இருக்கக் கூடாது என்பது நியதியாகும். ஆக அவள் புகுந்த வீட்டினைச் சேர்ந்தாகவேண்டும். பெண்ணுக்குப் பூப்பின் முன்னரே திருமணம் முடிந்துவிட வேண்டும் என்கிறது ஸ்மிருதி. பிராம புராணத்தின்படி பெண் நான்கு வயதின் முன்னரே திருமணம் முடித்தாகவேண்டும். இக்காரணங்களே குழந்தைத் திருமணத்திற்கு வழி கோலின எனலாம். எட்டாம், ஒன்பதாம் பிரா யத்துப் பெண்ணில் 'காதல்' என்ற சொல்லினைத் தூவுதல் தேவையா எனும் கேள்வி உங்களிடம் எழலாம். அக்கேள்விக்கு அழகான கவிதையைப் பதிலாகத் தருகிறான் பாரதி.

*ஒன்பதாய பிராயத்தள்*
*ஓது காதைச் சகுந்தலை*
*யொத்தனள்.*
*என்பதார்க்கும்*
*வியப்பினை நல்குமால்*
*என் செய்கேன்?*
*பழியென் மிசை உண்டுகொல்?*
*அன்பெனும் பெரு*
*வெள்ளம் இழுக்குமேல்*
*அதனை யாவர்*
*பிழைத்திட வல்லரே?*
*முன்பு மாமுனி வோர்*
*தமை வென்றவில்*
*முன்னரேழைக் குழந்தை*
*யென் செய்வனே?*

ஆக, எதிர்ப்பாற் கவர்ச்சியையோ அல்லது இருமனமொருமித்த காதலோ எதுவாயினும் அது இப்பருவத்துப் பெண் கடந்தேகும் விடயமாகவுள்ளது எனலாம். பிள்ளைகள் இருபாலாரும் கட்டிளமைப் பருவத்தினுள் முதல் காலடி பதிக்கும் பருவத்தில், அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை உளவியல் ரீதியில் எடுத்துநோக்க வேண்டிய தேவை உள்ளது.

## விழியில் விழுந்து... உயிரில் கரைந்து...



அன்புத்தேவையை ஈடுசெய்யும் பெண்ணின் அரவணைப்பினை ஆண்களின் உலகம் வேண்டிநிற்கிறது. தாயாக, காதலியாக, மனைவியாக, சகோதரியாக, சிநேகிதியாக ஆணுக்கு நிம்மதி தருபவள் பெண். அவனது வாழ்வினை நிறைவாக மலரச்செய்பவள் அவள். எந்தவொரு ஆணும் ஒரு தாயின் அல்லது பெண்ணின் வயிற்றினுள் அடங்கியிருந்தே ஜீவிதத்தை ஆரம்பிக்கிறான். பின்னரும் வாழ்வின் காலத்தில் ஒரு பெண்ணின் துணையை அவன் நாடுவது அவனது இயல்புந்தலாகும். படைப்பின் தவிர்க்கவியலாத பாகமாகவே எதிர்ப்பாலார் கவர்ச்சி

### அத்தியாயம் 08

காணப்படுகின்றது. இது பிள்ளைகளின் கட்டிளம்பருவத்தில் ஆரம்பமாகிறது.

ஆண் - பெண் இருபாலாரும் சடுதியான, மிக அதிகரித்த உடலியல் மாற்றங்களுக்கு உட்படும் பருவம் அவர்களின் கட்டிளம் பருவமாகும். பிள்ளைகளின் உடலில் ஏற்படும் துணைப்பாலியல் பண்புகளின் விருத்தியும், அவர்களின் குழப்பமான மனவெழுச்சிகளும் இப்பருவ இயல்புகளாகும். தாம் எதிர்கொள்கின்ற பாலியல் முதிர்ச்சி பற்றிய, தெளிவான விளக்கமின்மை அவர்களைப் பதகளிப்புக்கு உள்ளாக்குகிறது. தமது உடல் வளர்ச்சியைத் தம் கூட்டாளிகளுடன் ஒப்பிட்டு, தேவையற்ற மனக்கிலேசத்துக்கு உள்ளாகுகின்றார்கள். இத்தருணத்தில் தக்கவழி காட்டலை, ஆலோசனையைப் பிள்ளைகள் வேண்டி நிற்கிறார்கள்.

சுதந்திர உணர்ச்சி மிகுந்த இவர்கள், பொருளாதாரரீதியில் வலுவற்றிருப்பதால் மனமுடைகிறார்கள். பெற்றோரால் ஏற்படுத்தப்படும் மிகைக் கட்டுப்பாடுகள் பிள்ளைகளைத் தம்குடும்பக் கட்டமைப்பில் இருந்து விலகவைக்கின்றன. மனமுறிவுடன் ஒதுங்கியிருப்பதோ அல்லது வன்முறைகளில் ஈடுபடுவதோ இப்பிள்ளைகளின் நிலையாகும். இத்தருணத்தில் பெற்றோர், பிள்ளைகளுடன் நல்லுறவினை ஆக்கிக்கொள்ள வேண்டும். அவர்களின் வயதுக்கேற்ற உணர்ச்சிக்கோலங்களை மதித்தல்வேண்டும். அவர்களைத் தொடர்ந்தும் சிறுபிள்ளைகளாகப் பேணுதல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். பெற்றோரின் தேவையற்ற கட்டுப்பாடுகள் பிள்ளைகளைச் சலிப்படைய அல்லது கோபமடைய வைக்கலாம்.

இப்பருவத்தில் எதிர்ப்பாற்கவர்ச்சி இயல்பானது. பெண் பிள்ளைகள் தம்மை அலங்கரிப்பதில் கவனம் செலுத்துவார்கள். அவர்களின் கவனம் தம்மில் திரும்பும் வண்ணம் ஆண்களின் நடவடிக்கைகள் அமையும். அவர்கள் தம்முன பேசிச்சிரித்து, மகிழும் சந்தர்ப்பங்களை விரும்புவார்கள். இது எமது சமூகத்தின் பாரம்பரிய வழக்கத்திற்கு மிக முரணானது.

*என்னை*
*எல்லோருக்கும்*
*பிடித்திருக்கிறது.*
*அவனையும்*
*எல்லோருக்கும்*
*பிடித்திருக்கிறது.*
*எங்களைத் தான்*
*யாருக்கும் பிடிக்கவில்லை.*

என்ற கவிதை எமது சமூகம் ஆண் - பெண் தொடர்புகளை மறுப்பதற்கு ஆதாரமாகின்றது.

(பயணம் தொடரும்...)

ச. சாரங்கா

# சீதனம்

கடந்த 9.5.2003 ஆம் திகதி 'நமது ஈழநாடு' பத்திரிகையில் பக்கம் 5 இல் வெளியாகிய, சீதனம் வாங்கும் சமுதாயத்தில் சில சந்திப்புக்களும்... கருத்துக்களும் ... என்னும் பகுதி யாவும் வாசித்து அறிந்தேன். அதிலொரு சகோதரி சீதனம் வாங்கத்தான் வேண்டும். அதற்காக ஆசைப்பட்டு நிறைய வாங்காமல், அளவாகப் பெண் வீட்டாரின் வசதியைப் பார்த்து வாங்கவேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருந்தார். அதிலொன்று கவனிக்க வேண்டும். இந்த வசதி எங்கிருந்து வந்தது. வெளிநாட்டு வசதியுள்ளவர்கள் அதாவது, வெளிநாட்டில் நின்று உழைத்து அனுப்புகிறார்கள். அதனால், நிறையச் சீதனம் வாங்கலாம் என நினைப்பது தவறு. ஏனெனில், வெளிநாட்டில் அவன்(ள்) என்ன கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள் என்பது அந்த உழைப்பவர்களுக்குத்தான் தெரியும். இங்கிருப்பவர்கள் தூசாகப் 10 அல்லது 15 இலட்சங்கள் கேட்கிறார்கள். இலட்சங்கள் இலஞ்சங்கள் ஆகிவிட்டன. மற்றும் மாப்பிள்ளை படித்தவராக இருந்தால், அவரைப் படிப்பித்த செலவுகளுக்கும், அவருக்குப் பின் பிறந்த அல்லது முன் பிறந்த சகோதரிகள் இருந் தால், சீதனம் வாங்கித்தான் திருமணம் செய்ய வேணடுமென்றால், இதுவென்ன கொடுமை? மாப்பிள்ளையின் பெற்றோர் தம்பிள்ளைகளைப் படிப்பித்து... அவர்கள் நல்ல நிலைக்கு முன்னுக்கு வந்துவிட்டார்கள் என்றால், அதைப் பார்த்துப் பெற்றோர் பெருமைப்பட வேண்டும். யாரைப் படிப்பித்தார்கள் தம்முடைய பிள்ளைகளைத் தானே! அதற்காகத் தம்பிள்ளைகளையே விலை பேசுகிறார்கள். இது வென்ன நியாயம். பெண் வீட்டார்கூடத் தம்முடைய பிள்ளையைக் கஷ்டப்பட்டுப் படிப்பித்திருப்பார்கள். அதைவிட, பெண்ணுக்குப் பின் பெண் சகோதரிகள் இருந்தால், இவர்கள் பட்ட கஷ்டத்தை யார் ஈடுசெய்வார்கள். இவர்கள் நிலை? கண்ணீரும், கவலையும்தானா? சீதனம் ஒரு மூதலீடு என்றாலும், அந்த முதலீடு முழுவதையும் கொடுத்தால், பெண் பின்னால் உள்ளவர்நிலை எல்லாமே கேள்விக்குறியாகிவிடும். என்ன இருந்தாலும், மாப்பிள்ளையாக வருபவர்கள் தம்பெற்றோர் எதிர்பார்க்கும் சீதனத்தைவிடத் தனக்கு மனைவியாக வருபவளை நான் நன்றாக - அவள் எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யும் திடம், திறன் என்னிடம் உண்டு என நினைத்து நல்ல ஆண்மகனாகவும், நல்ல கணவனா கவும் வாழ நினைக்கும் அவனே சிறந்த நல்ல ஆண் மகனாக விளங்குவான்.

*என். மதி*
*மறவன்புலோ.*

---

2003.05.09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'நமது ஈழநாடு' பத்திரிகையில் சீதனம் வாங்கும் சமுதாயத்தில் சில சந்திப்புக்களும், கருத்துக்களும் என்ற பகுதியை வாசித்தேன். அதன் அடிப்படையில், நானும் சில கருத்துக்களை கூறவிழைகின்றேன். சீதனம் என்பது - இன்றைய சமுதாயத்தில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுவதுடன் ஒரு பிரச்சினையாகவும் உள்ளது. இதனால், பணக்காரப் பெண்கள் மட்டுமே வாழ்கின்றார்கள் என்பதும் உண்மை. ஏழைப்பெண்களின் வாழ்வில் சீதனம் என்பது 'இரும்புச் சங்கிலி' போன்றது. இதனால், எத்தனையோ பெண்கள் கற்பனைகளுடன் மட்டுமே வாழ்கின்றார்கள். சீதனம் என்னும் அரக்கனால், அவர்களது வாழ்வு

## விவாத அரங்கம்

அர்த்தமற்றதாகின்றது. சீதனம் வாங்கத்தான் வேண்டும். வாங்க வேண்டாமென்று நான் கூறவில்லை. அவரவர்களது தகுதி, தரங்களுக்கேற்ப அளவோடு வாங்கினால் என்றுமே இன்பமாக வாழலாம்.

பெண்கள் அதிகம் சீதனம் கொடுத்தால், ஆணை அடிமையாக நடத்துவார்கள். பெண்கள் சீதனம் இல்லாது போனால், பெண்ணைக் கொடுமைப்படுத்துவார்கள். ஆகவே, அளவோடு வாங்கினால் எல்லோருமே மகிழ்ச்சியாக வாழலாம். அசோக் அண்ணா கூறிய மாதிரி, காதலித்துத் திருமணம் செய்பவர்கள் சீதனம் வாங்குவது தவறென்றே நானும் கூறுவேன். சீதனம் வாங்கவேண்டும் என்று நினைத்தால், ஏன் காதலிக்க வேண்டும்?. சீதனம் இல்லாததால் முதலில் காதலிக்கப்பட்டு, பின்பு ஏமாற்றப்பட்டவர்கள் பற்றி நான் நிறையவே அறிந்திருக்கிறேன். ஆகவே, காதலிப்பவர்கள் சீதனம் வாங்குவது தப்பு என்றே நான நினைக்கிறேன். அதேநேரம் எதையும் எதிர்பாராது பெண்ணை வாழவைப்பவர்கள் என்றுமே போற்றப்பட வேண்டியவர்கள்.

*எஸ். சிவாஜினி*
*வேம்பொடுகேணி, பளை.*

---

**சீதனம் வாங்கும் சமுதாயத்தில்**

எமது சமூகத்தைத் தற்பொழுது ஆட்கொல்லி நோயாக ஆட்டிப் படைக்கின்றது சீதனம் என்னும் நோய். ஒருவன் குழந்தை பிறந்தவுடனேயே, அதன் பெற்றோருக்கு உடன் ஏற்படும் தீவிர பிரச்சினை பெண்ணுக்குப் பொருள் சேர்க்க வேண்டும் என்பதே.

வெளிநாட்டு வருமானம் வரத்தொடங்கிய இக்காலத்தில், அதன் விலையும் அதிகூடுதலாக ஏறிவிட்டது. ஆனால், உள்ளூர் வருமானத்தில் தங்கியிருக்கும் பெற்றோருக்குத் தற்போதைய விலைவாசி ஏற்றநிலையில், அதிக பொருள் ஈட்டமுடியாது தவிக்கின்றனர். இதன் காரணமாக, வாழ வேண்டிய வயதில் நல்ல வரன் அமையாது போகும் பெண்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

சீதன ஏற்றத்திற்குச் சில பெண்களும் காரணமாகின்றனர். ஒருதாய், தன் பெண்களுக்கு வரன் தேடும்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தபோதும், தன் மகனுக்குப் பெண் தேடும்போது அதிக சீதனத்தையே எதிர்பார்க்கின்றார். பெரும் பணத்துடன் பெண் எடுப்பது தமக்குப் பெருமை என்றும் கருதுகின்றார். ஆனால், பெரும் பணத்துடன்வரும் பெண்ணுடன் குடும்பம் நடத்தும் ஆண் நிம்மதியையோ, சந்தோஷத்தையோ அடைவதில்லை என்பதையும் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஒரு ஆண் மனமொத்த, அறிவான, சீதன மற்ற பெண்ணை ஏற்கும்போது எமது சமூகம் அந்த ஆணை இழக்காரமாக நோக்குகின்றது. சீதனம் என்பது - ஓர் அந்தஸ்த்தைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. இம்மனநிலை மாறவேண்டும். இதை மாற்றும் பாரியபொறுப்பு இளம் சமூகத்தினரிடமே உண்டு. இளம் ஆண், பெண் இருபாலாரும் இம்முறையை ஒழிக்கப் பாடுபடவேண்டும்.

**பொ. யோகராணி**
**வட்டுக்கோட்டை.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## (ஏ)மாற்று(ம்) யோசனை...?

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்குப் பதிலாக அரசாங்கம் முன்வைத்திருக்கும் மாற்றுயோசனை - எதுவித முடிவெடுக்கும் அதிகாரங்களையும் கொண்டிருக்காத வெறும் ஆலோசனைச் சபையாகவே அமைந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக அமைப்பொன்றைக் கோரவேண்டி வந்ததற்கான தேவைகள் எதனையும் கருத்திலெடுக்காத தன்மையிலேயே அரசாங்கத்தின் புதிய யோசனையின் உள்ளடக்கம் காணப்படுகின்றது.

ஏற்கனவே, வட-கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென அமைக்கப்பட்ட 'சிறான்' அமைப்புக்குரிய அதிகாரங்கள், கட்டமைப்பைக்கூட - அரசின் புதிய யோசனை கொண்டிருக்கிறதா என்ற சந்தேகமே தமக்கிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே - 'சிறான்' அமைப்பு உருவாக்கப்பட்டதன் தேவை, குறிப்பிடத்தக்க எந்த அளவிலேனும் முன்னேற்றம் காணாததைத் தொடர்ந்தும் -

தமிழ் மக்களுக்கான சுமுகவாழ்வு இன்னமும் எட்டாக்கனியாகவே இருப்பதை வலியுறுத்தியுமே - இடைக்கால நிர்வாக அமைப்பொன்றின் தேவையை விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறான இடைக்கால நிர்வாக அமைப்பு - அரசியலமைப்புக்கு அப்பால், சகல அதிகாரங்களும் கொண்டதாக அமையும் பட்சத்திலேயே - அது, உறுதியான வழியில் தமிழ் மக்களின் புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகளுக்கு உதவக்கூடிய செயலாற்றலைக் கொண்டிருக்கும் எனவும்,

- சிக்கல்களும், நெருக்குதல்களும், பொறிகளும் அற்றதாக - முடிவெடுத்தலிலும், நடைமுறைப்படுதலிலும் அது ஆக்கபூர்வமாகப் பங்கேற்கும் என்பதையும், விடுதலைப் புலிகள் தெளிவாகவே அரசாங்கத்துக்கு உணர்த்தியிருந்தனர்.

இப்படியான அதிகார அமைப்பு மூலமே - தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய வகையில் - விடுதலைப் புலிகளால் தமிழ் மக்களுக்குரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்பதையும் -

அத்தகையதொரு கட்டத்தில்தான் சமாதானப் பேச்சுக்களிலும், ரோக்கியோ மாநாட்டிலும் பங்கேற்பதே பொருத்தமானதாக, அர்த்தபூர்வமானதாக இருக்குமென்பதையும் புலிகள் தரப்பு அரசாங்கத்துக்குத் தெளிவுபடுத்தியிருந்தது.

ஆனால் - அரசாங்கத்தின் மாற்றுயோசனையையோ - கிடைத்துள்ள தகவல்களினடிப்படையில், வட-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கும், முன்னுரிமைத் திட்டங்களைப் பிரேரிக்கும், திட்டங்களைக் கண்காணிக்கும் ஓர் உயர்மட்டச்சபை என்ற அளவிலேயே இருப்பதாகத் தெரியவருகின்றது.

அதிலும், இந்த உயர்மட்டச்சபையின் அமைப்பு ரீதியான ஒழுங்கும், வட-கிழக்கிலுள்ள மூவின மக்களதும் இனப்பரம்பல் அடிப்படையிலான விகிதாசாரத்தின்படியே கவனத்திற் கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுவதும் - அராசங்கத்தினால் பிரேரிக்கப்படும் சபையில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பைப் பற்றிய பெரும் வினாவைத் தோற்றுவிக்கின்றது.

'சிறான்' போன்ற அமைப்புக் கண்ட பின்னடைவு அனுபவங்களும் - தமிழ் மக்களுக்குத் தேவையான அவசரமான, மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளை குறுகிய காலத்தில் நிறைவேற்றவே உருவாக்கப்பட்ட சிறானின் இலக்கு எவ்வகையிலும் நிறைவேற்றப்படாததும் விடுதலைப் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்டும் -

அரசாங்கம் - 'பழைய பல்லவி'யெனவே தனது 'புதிய யோசனை'யை முன்வைத்திருப்பது - ஆக்கபூர்வமான செயற்பாடாக அமையவில்லை என்றே கருதப்படுகின்றது.

போரால் சிதைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சுமுக வாழ்வை - மீளக்கட்டியெழுப்புவதற்கும், புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு - தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வை மீளநிர்மாணிப்பதற்கும் - அக்கறையற்ற விதத்திலேயே அரசாங்கத்தின் மாற்று யோசனை அமைந்திருக்கிறது.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளையும் பங்கேற்கச்செய்து - நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமாயிருக்கும் அரசாங்கம் - அந்த நிதியுதவிகள் தமிழருக்குச் சென்றடைவதற்குரிய - அதிகாரமுள்ள கட்டமைப்பை உருவாக்காமல் - 'சளாப்பும்' விதத்தில் மாற்றுயோசனையை முன்வைப்பது- தமிழ் மக்களை ஏமாற்ற முனையும் வழக்கமான சிங்கள அரசாங்கங்களின் போக்கிற்குள், பிரதமர் ரணிலின் அரசாங்கமும் வந்து சேர்கின்றதோ என்ற சந்தேகத்தைத்தான் தமிழர் மனதில் விதைக்க வைத்திருக்கிறது.

# பொ.ஐ.முவின் தீர்வு யோசனை; நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்!

## ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் முழுமையான இணக்கப்பாடு ஏற்பட்டாலும்- 2000 ஆம் ஆண்டில் பொ.ஐ.மு. சமர்ப்பித்திருந்த அரசியற் தீர்வுத்திட்ட யோசனைகளின் அடிப்படையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படமாட்டாது என, ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பி. மற்றும் பொ.ஐ.மு. ஆகியவற்றின் நிலைப்பாடுகள் வெவ்வேறானவையாகும். 2000 ஆம் ஆண்டுத் தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு சுதந்திரக்கட்சி எம்மை வற்புறுத்தவில்லை.

இருகட்சிகளும் - இணக்கப்பாட்டுடன் புதியதொரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தீர்மானித்துள்ளோம். முன்பு சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள் பற்றிப் பேசுவதில்லை என்று இரு கட்சிகளும் ஏகமனதான தீர்மானத்தை எடுத்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு அதிகளவு நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்தும் யோசனைகள் அடங்கிய 2000 ஆம் ஆண்டுத் தீர்வுத்திட்டத்தை அன்று நாம் வன்மையாக எதிர்த்தோம். விடுதலைப் புலிகளும் அந்தத் தீர்வு யோசனைகளை நிராகரித்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலதிக லீவுகள் பெறும் ஆசிரியர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

அனுமதிக்கப்பட்ட விடுமுறைகளுக்கு மேலதிகமான லீவுகளைப் பெறும் அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானத்தை கல்வி, மனிதவள அமைச்சர் எடுத்துள்ளதாக அந்த அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக, கடந்த ஐந்து வருடங்களுக்குள் சம்பளமற்ற லீவுகளைப் பெற்ற ஆசிரியர்களின் விபரங்களைத் திரட்டும் பணி இடம்பெறவுள்ளது. இதற்கான சுற்றுநிருபம், விரைவில் கல்வி அமைச்சினால், சகல மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

# கொழும்பில் நிலநடுக்கம்; வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கை!

(கொழும்பு)

கொழும்பில் நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்பிருப்பதாகப் பிரபல பூகர்ப்பவியலாளரான கலாநிதி லலித் விஜேவர்த்தன எதிர்வு கூறியுள்ளார்.

செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கும், டிசம்பர் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கொழும்பில் பூகம்பம் ஏற்பட்டு, அனர்த்தங்கள் விளையலாம் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் - இரத்தினபுரி, கடுவெல பிரதேசங்களில் இந்த ஆண்டு மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார். மேலும், மீரிகம பகுதியில் பெரும் சூறாவளி ஒன்று ஏற்படவுள்ளதாகவும் கலாநிதி லலித் விஜேவர்த்தன குறிப்பிட்டார்.

# உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து 3 முதலமைச்சர்கள் பதவியிழப்பர்!

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடாதவர்கள் - உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை உறுப்பினர்களாக இருக்கமுடியாது என, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதையடுத்து, பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாண முதலமைச்சர்கள் மூவர் பதவிகளை இழக்கும்நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடாத சமரவீர வீரவன்னியை, தேர்தல் ஆணையாளர் ஊவா மாகாணசபை உறுப்பினராக அறிவித்ததற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில், தேர்தலில் போட்டியிடாத ஒருவர் - மாகாணசபை உறுப்பினராக் இருப்பது சட்டவிரோதமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்தே, பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தென்மாகாணசபை முதலமைச்சர் எச்.ஜி.சிறிசேன, மேல்மாகாண முதலமைச்சர் போ்டி பிரேமலால் திஸநாயக்க, வட மத்திய மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே ஆகியோர் பதவி இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் - மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல், தேர்தல் ஆணையாளரால் மாகாணசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஜே.வி.பியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் பலரும் தேர்தலில் போட்டியிடாமல், மாகாணசபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டதால், அக்கட்சிக்கும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

# டென்மார்க் நாட்டு அமைப்புடன் கண்ணிவெடி அகற்றும் ஒப்பந்தம்;

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கைச்சாத்து

(கிளிநொச்சி)

கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பான ஒப்பந்தத்தை, டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் (DDG) - தமிழர் புனர்வாழ்வுக் கழத்துடன் கைச்சாத்திட்டுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி நண்பகல் இந்நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழக முதன்மைப் பணியகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, அவுஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சந்துரு பரராசசிங்கம், டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பிரதிநிதி எரிக் வின்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

DDG யினரின் உதவியுடன் - இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பூநகரி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எவ்.எம். நேயர்களுடனான சந்திப்புக்கு வருகை தந்திருந்தோரைப் படத்தில் காணலாம்.

# சட்டவிரோத மின்பாவனையாளரை கட்டுப்படுத்த வாகன வசதி இல்லை!

## வடமராட்சி மின்சாரசபை வட்டாரங்கள் கவலை

(துன்னாலை)

சட்டவிரோத மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்த போதிய வாகனவசதிகள் இல்லாதிருப்பதாக, மின்சாரசபையின் வடமராட்சி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது, வடமராட்சியில் மின்சாரசபைக்கென ஒரேயொரு வாகனம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதை வைத்துக்கொண்டு சட்டவிரோத மின்பாவனையை முற்று முழுதாகக் கட்டுப்படுத்த முடியாதநிலை காணப்படுகிறது.

சட்டவிரோத மின்சாரப் பாவனை குறித்துப் பரவலாக புகார்கள் கிடைத்து வருகின்றன. இவ்வாறு கிடைக்கும் புகார்கள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய வாகனவசதிகள் இல்லை.

இதேவேளை - சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று பிடிபட்டுக் குற்றப்பணம் செலுத்தியவர்கள் - மீண்டும் சட்டவிரோத மின்சாரம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# பல்கலைக்கழக பாட நெறிகளில் மனைப்பொருளியல்; புதிய பாடங்களைத் தெரிவதால் தேர்ச்சி அடையலாம்

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று, உள்வரும் மாணவர்கள் காலத்திற்கேற்ப மாறிவரும் அனுமதி முறைகளால் பல சிக்கல்களை எதிர் நோக்குகிறார்கள். இத்தகைய மாற்றங்களால், அனுமதிக்கப்படும் மாணவர்களின் அளவும் பாதிக்கப்படுகின்றது. கலை, வர்த்தகம், விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் எனப் பலவாறாகப் பாடங்களைப் பிரித்து, அவற்றிற்கேற்ப விகிதாசாரத்தின்படி அனுமதிகளை வழங்கினாலும், நாட்டின் பாடசாலைகளுக்கிடையிலும், தனிப் பட்டரீதியிலும், இம்முறையை அமுல்படுத்துவதில் பாரியசிக்கல் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்படுமானால், தொடர்ந்து பலர் இதனைக் கற்க ஆர்வமாக முன்வருவார்கள் என நினைக்கிறோம்.

ஒருசில பாடசாலைகளில் - மனையியல் உயர்தர வகுப்பில் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய புதிய நெறிகள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யமடையாத பாடங்களாகும். ஆனால், இவை மாணவர்களுக்கு மிகவும் நல்லவழிகாட்டியாக, எதிர்காலத்தில் அமையக்கூடியவை. பல பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் மட்டுமே மனையியல் என்ற பாடம் கற்பிக்கப்படுகின்றது. அதிக



களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் எதிர்நோக்குகிறார்கள். இதனைச் சமாளிக்கவும் அவர்களால் முடியவில்லை.

தற்போது இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி, மாணவர்கள் உயர்தர வகுப்புகளுக்கு அடியெடுத்து வைத்துள்ளனர். இந் நிலையில், மாணவர்களுக்கிடையில், எப்பாடத்தைத் தெரிவுசெய்வது என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. இந் நிலையில், இக்கட்டுரை அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

முக்கியமாக, இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு பாடநெறி மனைப் பொருளியல் ஆகும். இப்பாடநெறி முதன்முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்தான் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கடந்த கல்வியாண்டில் (2001-2002) பல்கலைக்கழக அனுமதிமுறையில், மனைப்பொருளியல் என்ற பாடம் அறிமுகப்படுத்தப் பட்டு, மாணவர்கள் தற்போது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் முதல் வாய்ப்பென்பதால், மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. ஆனால், இதன் மான மாணவர்கள் கற்க முன்வருவதுமில்லை. இது எமது அறியாமை. அதைக் கற்பதால் எதிர்காலம் இல்லை. பெண்கள் மட்டும் கற்க வேண்டும். ஆண்கள் கற்பது தவறு. கற்க முன்வருவதுமில்லை. இத்தகைய மனப்பாங்கு மாறவேண்டும். ஏனெனில், இவ்வளவு காலமும் இப் பாடநெறி பல்கலைக்கழக மட்டத்தில் இருந்ததில்லை. ஆனால், தற்போது அதுவொரு பாட அலகாகப் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், பல மாணவர்களுக்கு இதனால் 'பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, உயர்வகுப்பு மாணவர்கள், ஏனைய பாடங்களைப் போன்று இப்பாடத்தையும் ஒன்றாகக் கற்க முன்வரவேண்டும். பல பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் இதற்காக முன்னின்று இப்பாடத்தை உயர்தர வகுப்பில் ஒரு பாடமாகக் கற்பித்தால், மாணவர்களுக்கு அதனால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத்தரமுடியும். அண்மையில் வெளிவந்த சாதாரண தரப்பரீட்சை முடிவுகளின்பின், மாணவர்கள் எந்தத்துறைக்குப் போவதெனக் குழம்பிப் போயுள்ளார்கள். அவர்களை நல்வழிப்படுத்தி, அத்தகைய பாடங்கள் உங்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன்மூலம், அவர்களுக்கு ஒரு பாதையைக் காட்டலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதொரு பிரஜையை உருவாக்கிய பெருமை வந்தடையும்.

கலைப்பிரிவு மாணவர்கள் மட்டுமல்ல, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களும் மனைப்பொருளியலை ஒரு பாடமாகக் கற்கலாம். இதுவொரு விஞ்ஞானரீதியான கற்கைமுறை என்பதை மனதிலிருத்திக் கொள்ளுங்கள். இந்திய நாட்டில் மாணவர்கள் மருத்துவத்துறையைத் தெரிவு செய்த பின்னர், அடுத்துத் தெரிவு செய்வது இந்த மனைப்பொருளியல்துறையையே. அந்தளவுக்கு அங்கு இப்பாடத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துள்ளார்கள். அதுபோன்று, இங்கும் இப் பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதனைப் பாடசாலையில் அறிமுகப்படுத்த முன்வாருங்கள். எனவே, மாணவர்களே உங்கள் எதிர்காலத்தை யோசித்து, சகமாணவர்கள், நண்பர்கள் தெரிவுசெய்வது போன்று நீங்களும் யோசிக்காமல், விருப்பமுடன் புதிய புதிய பாடங்களைத் தெரிவுசெய்வதன்மூலம் நல்லமுறையில் கற்றுத் தேர்ச்சியடையமுடியும். இப்பாடத்திற்குப் பெண்கள் மட்டும்தான் உரித்தானவர்கள் என்று எண்ணுவது தவறு. ஆண்களும் இவற்றைத் தெரிவு செய்யலாம்.

மனைப்பொருளியலிலுள்ள பல பாட அலகுகளில், விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் அறிவியல் ரீதியாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

**உடற்கூற்றியல் (Physiology)**
**நுண்ணுயிரியல் (Microbiology)**
**பிள்ளை விருத்தி (Child development)**
**உயிரியல் இரசாயனம் (Bio chemistry)**
**புடவையும், உடையமைத்தலும் (Textile & Clothing)**
**உணவு விஞ்ஞானம் (Food science)**
**மனை நிர்வாகம் (Home Management)**
**போஷாக்கும் உணவும் (Nutrition & Dietetics).**

போன்ற பலவகையான விஞ்ஞான, மருத்துவக் கூறுகளை உள்ளடக்கியுள்ளன. எனவே, பெண்கள்தான் இந்தப் பாடத்தைக் கற்க உகந்தவர்கள் என்பதைவிட, ஆண்களும் இப்பாடத்தைப் பயிலலாம் என்பது இதனால் தெளிவாகின்றது. குறிப்பாக, கலைப்பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரை, நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் பலவகையான பாடங்களைக் கற்கைநெறியாகக் கொண்டுள்ளன. இந்த வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பல பாடங்கள் புதிதாக இந்தக் கல்வியாண்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. மானிய ஆணைக் குழுவினர், கலைப் பாடங்களைப் பொறுத்தவரை இருவகையான பல்





கலைக்கழக அனுமதியை நடைமுறையில் கொண்டுள்ளனர்.

**1. சாதாரண அனுமதி**
**2. விசேட அனுமதி (Special intake)**

சாதாரண அனுமதி முறையில், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வெட்டுப்புள்ளிக்குமேலே புள்ளிகளைப் பெற்றவர்கள், பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுகிறார்கள். இவர்களின் தெரிவுப் பாடங்களாக அங்கீகரிக்கப்பட்ட கலைப்பிரிவைச் சேர்ந்த எல்லாப் பாடங்களும் அமையும். ஆனால், விசேட அனுமதிமுறை என்பது - பல்கலைக்கழகத் தெரிவுக்கு உட்படாமல், வாய்ப்புக் கிடைக்காமல் - ஆனால் ஓரளவுக்கு வெட்டுப் புள்ளிக்கு அண்மித்ததாகப் புள்ளிகள் பெற்றவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இவர்கள் க.பொ.த. (உயர் தர) பிரிவில் கற்ற பாடங்களின் அடிப்படையில் நேரடியாகவே அந்தந்தப் பாடங்களுக்குத் தெரிவுசெய்யப்படுகிறார்கள். உதாரணமாக - க.பொ.த. உயர்தரத்தில் இந்துநாகரிகத்தையோ, கிறிஸ்தவ நாகரிகத்தையோ ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திலும் அந்தப் பாடத்தையே தொடர்ந்து கற்கவேண்டும். அவர்கள் பல்கலைக்கழக வாழ்நாளில் (மூன்று அல்லது நான்கு வருடங்கள்) தொடர்ந்து இப்பாடத்தையே கற்கவேண்டும். இவர்கள் விருப்புப் பாடமாக மற்றைய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். அதுமட்டுமன்றி, இப்பாடத்தை மட்டுந்தான் (இந்து நாகரிகம்) சிறப்புப் பாடமாகக் கற்க முடியும். ஏனைய பாடங்களை அவ்வாறு கற்கமுடியாது.

மேற்கூறிய விசேட அனுமதிக்குட்பட்டுப் பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படாத பாடங்களாகவும், பல கற்கைநெறிகளை ஆணைக்குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அதில் முக்கியமாக மொழியியல், ஆங்கில இலக்கியம் (யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை உயர் வகுப்பில் அதனைக் கற்பிப்பது மிக மிகக் குறைவு, அரிதென்றே கூறலாம்). சைவசித்தாந்தம், தொல்லியல், மனைப்பொருளியல், மெய்யியல், உளவியல் என்பவை குறிப்பிடத்தக்கவை. விசேடமாக மனைப் பொருளியலைப் பொறுத்தவரையில், இதுவரை கலைப்பிரிவு மாணவர்களுக்கே இத்தகைய அனுமதி முறையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் விஞ்ஞானப்பிரிவினரையும், இக்கற்கைநெறிக்குள் உட்படுத்தவேண்டும். இதற்கு ஆவன செய்யவேண்டியது பாடசாலைகளும், பல்கலைக்கழகச் சமூகத்தினருமேயாகும். இதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இக்காலத்தில் அவசியமாகிறது.

எனவே - பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நடைமுறையிலுள்ள பாடங்களை மட்டுமல்லாது, வாழ்க்கைக்கு உகந்த செயற்பாடுகளைக் கொண்ட மனைப்பொருளியல் போன்ற பாடங்களை உங்கள் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்க முயற்சியெடுங்கள். இதனால், மாணவர்கள் இவற்றை நாடிவர வழிசெய்யுங்கள். அதன்மூலம் பல்கலைக்கழகம் செல்லத் தகுதியற்றவர்கள் நாங்கள் என்ற நோவுடன் ஏங்கித்தவிக்கும் மாணவர்களை அரவணைத்து, இத்தகைய மார்க்கத்தில் செல்ல வழிகாட்டுங்கள்.

**கலாநிதி. சுபதினி ரமேஷ்,**
இணைப்பாளர்,
மனைப்பொருளியல்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சமூகத்தின் வழிகாட்டிகளாக குருமார் இருக்கவேண்டும்!

## நூல் வெளியீட்டு விழாவில் இந்துமத குரு பீடாதிபதி உரை

"சமஸ்கிருத நூல்கள் அருகி வருகின்ற இக்காலத்தில், பழைய கையெழுத்துப் பிரதிகளைப் பெற்று, கணினி மூலம் வடிவமைத்து, சமூகத்திற்கு வழங்குகின்ற இத்தொண்டானது போற்றப்பட வேண்டியதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும்."

ஊரெழு சிவஸ்ரீபால வைத்தியநாத சிவாச்சாரியாரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட 'ஸ்ரீ அஷ்டோத்தர சத கதம்பம்' என்னும் சமஸ்கிருத நூலை வெளியிட்டு வைத்த இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ.ஐ. மகேஸ்வரக் குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில், ப.சிவானந்த சர்மா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் - தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், குடாநாட்டின் காவலரண்களாக விளங்கும் தீவுப் பகுதிக் கோவில்கள் பலவற்றின் கும்பாபிஷேகக் கிரியைகளை ஆகமமுறைப்படி நடாத்திய சிறப்பு, வைத்தியநாத சிவாச்சாரியாரையே சாரும். அவர் செய்த பேற்றினால் அவரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் இந்நூல்கள், இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் மிகுந்த மதிப்புடையது எனத் தெரிவித்தார்.

பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் அங்கு உரையாற்றுகையில் -

முன்னைய காலங்களில் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவதற்கு ஒரு சிலரே தகுதியானவர்களாக இருந்தார்கள். அவர்கள் புராண சந்தேகங்களை நீக்கக்கூடியவாறு பரிபூரண அறிவு பெற்றிருந்தார்கள். அவர்களைப்போல் இக்கால குருமார்களும் புராணங்களைக் கற்றுச் சந்தேகங்களைத் தீர்த்து, சமூக வழிகாட்டிகளாக திகழவேண்டுமென்றார்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் பிரதமகுரு பிரம்மஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள் நூலை வெளியிட்டு வைக்க, கீரிமலை நகுலேஸ்வர ஆலயகுரு பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். (101)

## போட்டிப் பரீட்சை

சிறிலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடாத்தும் தொழில்நுட்ப அலுவலர் தரம்-4 இற்கான போட்டிப் பரீட்சை, ஜூன் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் - தமது அனுமதி அட்டைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன், கஸ்தூரியார் வீதியிலுள்ள, அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பெற்றுக்கொள்ளும்படி அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கேட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அடையாள அட்டை கண்டெடுப்பு

முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த நாகமணி கமலாவதி என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் மற்றும் தொழில் அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## அதிபர் பதவிக்கு வெற்றிடம்

இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது. இங்கு அதிபராக இருந்த எஸ்.குபேரநாதன் - உடுவில் கோட்டக் கல்வி அதிகாரியாக அண்மையில் நியமனம் பெற்றிருந்தார். இதனால் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

## கந்தரோடை விநாயகர் மஹோற்சவம்

உடுவில், கந்தரோடை அருளானந்த விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் உற்சவத்தில் - 11 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சப்பறத் திருவிழாவும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் மாலை 7 மணிக்கு 'பெரிய புராணச் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபரும், எழுத்தாளருமாகிய பிரம்மஸ்ரீ சிவசரவணபவனின் (சிற்பி) தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (101)

## வர்த்தக சங்கக் கூட்டம்

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை பி.ப. 3.30 மணிக்கு வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(101)

# செயற்படுத்த முடியாத விடயங்கள்...

முயற்சியாகவும் தோன்றியது. ஒவ்வொரு, முயற்சியும் வலிமையாகவும், நல்லுணர்வோடும் இருந்தபோதிலும், ஒவ்வொன்றும் தோல்வியையே தழுவின. இம்முயற்சிகள் வெற்றியீட்டாத போதிலும் ஒவ்வொரு முயற்சியும் எமக்கு மேலும் விளக்கத்தை அளித்தது. சமாதானத்தை உருவாக்குவதில் எம்மில் எவருக்கு ஆழ்ந்த அனுபவம் இருக்கவில்லை. நாம் ஒவ்வொருவரும் எமது முயற்சி மூலம் தீர்வுகளை நாடவேண்டியதாயிற்று. சில வேளைகளில் தூரத்தில் இருப்பதுபோல் தென்படும். புதிய திருந்திய வழிவகைகளை இடைவிடாது பரிசீலித்தும் பார்த்தோம்.

மேற்கூறியவை கடந்த மாதங்களின் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன. கடந்த 18 மாதங்களில் பேச்சுவார்த்தை திடமாக முன்னேற்றம் அடைந்துவிட்டது போன்ற நிலைமை தென்பட்டது. சடுதியாக பேச்சுவார்த்தைகளில் அதிருப்தியடைந்த ஒரு பங்காளியை முகம் கொடுக்க நேரிட்டது. குறைந்தபட்சம் ஒரு சில காலத்திற்கேனும் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உலகின் வேறு பகுதிகளில் அனுபவரீதியாகக் கிடைத்த படிப்பினை, சமாதானப் பாதையில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படலாம் என்பதாகும். விரைவான முன்னேற்றம் ஏற்படும் நேரங்களில் - பெரும் மகிழ்ச்சியும், ஏனைய சந்தர்ப்பங்களில் பின்னடைவு காணும்பொழுது யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் காரணமாக மனச்சோர்வும், தடுமாற்றமும் ஏற்படலாம்.

பல வழிகளில் இப்படிப்பட்ட இடைவெளிகள் நன்மை பயக்குவனவாகவும், சுத்தமளிப்பனவாகவும் அமையலாம்.

இவ்வாறு திணிக்கப்பட்ட இடைவெளிகள், எமது கூட்டு இலக்கை எவ்வாறு முன்னேற்றகரமாக அடையலாம் என்பதை - மதிப்பீடு செய்வதற்கும், பரிசீலிப்பதற்கும் வழிவகுக்கலாம். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இடைநிறுத்தம், இதனையே எய்த வழிகோலியது. கடந்த 15 மாதங்களில் நிகழ்ந்தவற்றை - மறுமதிப்பிடவும், நிதானமாக மறுபரிசீலனை செய்யவும் நேர்ந்தது.

முன்னைய சமாதான முயற்சிகளில் நாம் படிப்பினைகளைப் பெற்றுள்ளோம். சமாதானம் அடைவதற்கான முயற்சிகள் உண்மையானவைகளாக இருப்பதுடன், அவை ஏறபடுவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். அதை நாம் செயற்படுத்தியுள்ளோம் என நான் நம்புகிறேன்.

பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் நிலையில் இருந்ததுடன், யுத்தத்தை இனிமேலும் தொடர முடியாத நிலை ஏற்பட்டதால் அது எமக்கு நிர்ப்பந்தமாயிற்று. எமது வெற்றிக்கு அத்தியாவசியமான சர்வதேச சமூகத்தின் - நிதியுதவியும், தொழில் நுட்பமும் இன்றி நாம் இதை வெற்றிகரமாக செயற்படுத்த முடியாது.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இப்பெயர்ப்பட்ட நல்லுறவுகளுடன் இம்முறை வெற்றியீட்டாவிட்டால், 30 - 40 ஆண்டுகளில் நாம் சரித்திரத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக நேரிடலாம். எமது மக்கள் மேலும் நலிவடைந்து, எமது கைத்தொழில்கள் உலக சந்தையில் போட்டியிட தத்தளித்து, அர்த்தமின்றி மக்கள் பிணக்கில் மடிய நேரிடலாம்.

கடந்த 16 மாதங்கள் பற்றிய எமது மதிப்பீட்டு மூலம், உலகிலுள்ள ஏனைய சமாதான முயற்சிகளில் போலல்லாது, ஒரு மாற்றுப் பாதையைக் கடைப்பிடிக்க எமக்கு உணர்த்தியுள்ளது. மற்றைய இடங்களில் ஆரம்ப கட்டத்தில் அரசியல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு முதலில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இவ்விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்ட பின்பே, மனிதாபிமான பிரச்சினைகளுக்கு மக்கள் முக்கியத்துவம் அளித்தனர்.

இங்கு - இலங்கையில் நாம் அவ்வாறு செய்யமுடியவில்லை. மேலும், அது சரியென்று நாம் எண்ணவில்லை. வடக்குக்கும் கிழக்குக்கும் சென்றவர்கள், அங்கு ஏற்பட்டுள்ள பாரிய அழிவையும், ஏராளமான மக்கள் அப்பகுதியில் வாழும் துன்பநிலையையும் பார்த்திருப்பார்கள். நாம் செய்யவேண்டியது என்னவென்பது எமக்கு வெளிப்படை. அது மக்கள் அல்லலை இயன்றளவு துரிதமாக அகற்றுதலாகும்.

இதன் முதற்கட்ட நடவடிக்கை, போர்நிறுத்தம் என்பது வெள்ளிடைமலையாகும். இதற்கு முன்பாகவே, நாம் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் போன்றவற்றை தங்குதடையின்றி எடுத்துச் செல்ல வழிவகுத்தோம். ஒரு சிக்கலான முயற்சியில் இது ஒரு சிறிய நடவடிக்கையாயினும் இது அப்பகுதிகளில் வாழ்ந்த எம் மக்களுக்கு உடனடியாக பயனளிக்க உதவியது.

ஒரு நிரந்தர யுத்த நிறுத்த உடன்பாடே, அடுத்த கட்ட நடவடிக்கையாகும் என்பது தெளிவாகியது. இந்த ஒப்பந்தம் பற்றி ஏராளமான கருத்துப் பரிமாறல்கள் நிகழ்ந்துள்ளது எனினும், இது எமக்கு - பேச்சுவார்த்தைக்கு ஒரு சந்தர்ப்பத்தையும், இளைப்பாறும் இடைவெளியையும் அளித்தது என்பதை நியாயமான எவரும் உணர்வார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்துடன், மேலும் பல முக்கிய நன்மைகள் மக்களுக்கு கிடைத்துள்ளமை, கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் விடுவிக்கப்பட்டதன் மூலம், இப்பகுதிகளில் சுமூகநிலை ஏற்படுவதற்கு மேலும் சந்தர்ப்பம் கிட்டியது. இந்த முன்னேற்றத்தின் பின்னணியிலும், ஒரு பாரிய முட்டுக்கட்டைக்கு முகங்கொடுக்கவேண்டியதாயிற்று. இத்தகைய புதுமையான சமாதான உருவாக்கலை, எமது அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் பல்வேறு சர்வதேச கொடையாளிகள் அறிந்திருக்கவில்லை. புனர்வாழ்வுக்கும், மீள் அபிவிருத்திக்கும், உதவி வழங்குவதற்கு முன் - ஒரு தாளில் ஒப்பமிடபபடும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். எமது பலவீனம் அடைந்த பொருளாதாரத்துடன், வருவாய் குறைந்த திறைசேரியில் கையிருப்பு சொற்பப் பணமே இருந்தது. புனரமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்க சர்வதேச ஒத்தாசையும் நிதியுதவியையும் நாம் சேகரிக்க வேண்டியதாயிற்று.

ஒஸ்லோவில் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடந்த நிதியுதவி மாநாடு, எமக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கியது. அங்கு எமக்கு நிதியுதவி கிட்டியதெனினும், சுமூக நிலையை ஏற்படுத்தும் திட்டங்களை ஏற்படுத்திச்செல்ல எமக்கு வேண்டிய பலம் இருந்ததா?

இதற்கு தெளிவான விடை இல்லையென்பதாகும்.

வலுவின்மை யுத்தத்தின் ஒரு விளைவாகும். நிர்வாக நிலைமை சீரழிந்ததினால், சில அரச அதிபர்கள் மர நிழலில் அத்தியாவசிய அடிப்படைக் கருவிகளுடன் மட்டும் செயற்படவேண்டியதாயிற்று. ஒஸ்லோவில் நிதி வழங்க வாக்குறுதிகள் கிடைத்த போதும், அந்நிதி திரட்டப்பட்டு பிரயோகிக்கப்படவேண்டும்.

மேலும் சில பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டியதாயிற்று. வடக்கிலும், கிழக்கிலுமுள்ள மக்களுக்கு உதவ விரும்பியபோது, முற்றாக ஒருங்கிணைக்கப்படாத முறையில் செயலாற்றிய பல்வேறு முகவர்களை, எல்லாமாக 17 முகவர்களைச் சமாளிக்கவேண்டியதாயிற்று. குழப்பமும், முயற்சிகள் இரட்டிக்கப்பட்டமையும் இதன் விளைவாகும்.

இவையாவும் - கட்டுக்கடங்காத மேலும் வீழ்சியடையும் பொருளாதாரத்தோடு திண்டாடும்போது நிகழ்ந்தவை என நான் உணர்த்த விரும்புகின்றேன்.

இந்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் - நாம் முன்னேறிய வேகத்தைப் பற்றியும், செயற்பட்ட விதத்தைப் பற்றியும், சலிப்படைந்ததையிட்டு வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு சிறிய நடவடிக்கைகளைக் கூட எடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் பற்றி நாமும் விரக்தியடைந்துள்ளோம்.

சிறான் போன்ற குழுக்களை அமைப்பதன் மூலம், இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் நாம் முயற்சித்தோம்.

துரதிஷ்டவசமாக இவற்றின் விளைவுகள் வேகமாக நிகழாதது மட்டுமன்றி, இதில் இருந்து பயன் அடையவேண்டிய மக்களினால் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. நாட்டின் பல பகுதிகள் திறக்கப்பட்டமை, உட்கட்டமைப்பு சீராக்கப்பட்டமை, நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் திட்டம் , ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு அழிக்கப்பட்டமை, உள்ளூர் கைத்தொழில்கள் - முக்கியமாக மீன்பிடித் தொழில், கமத்தொழில் போன்றவை ஸ்தாபிக்கப்பட்டமை- உணவு, மருந்துவகை விநியோகம் போன்றவற்றின் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கபடவேண்டியுள்ளன.

மீன்பிடி மற்றும் விவசாயம் போன்றவற்றில் ஈடுபடும் மக்களை ஒரு கணம் நோக்கும்போது, வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள எம் மக்களின் சக்தி விடுவிக்கப்பட்டபோது நிலைமை திடீரென முன்னேறியது. இலங்கையின் வடக்கில் சிறந்த மீன் வளமுள்ள கரையோரப் பகுதிகளில், மீனவர்களை மீன்பிடித் தொழிலுக்கு அனுமதித்ததும், கணிசமான அளவு மீனை அவர்கள் பிடிக்கக்கூடியதாக இருந்தது.

சென்ற ஆண்டில் இந்நடவடிக்கை மூலம் மீன்பிடித் துறையில் 20 சதவீத முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. மீன் உற்பத்தி 302 890 மெற்றிக்தொன்னாக உயர்ந்தது மாத்திரமல்ல - வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின்

(10 ஆம் பக்கம் பார்க்க)


## தேவை

பெண்களுக்கான
உடைகள் வெட்டுவதற்கு, தைப்பதற்கு
அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை

தொடர்பு : பானு காமென்ஸ்
இல. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் வீதிக்கு அண்மையில்) (358)



## பேருரை

**தென் ஆபிரிக்க சமாதானப் பயணத்தில், இடைக்கால அரசியல் யாப்பு.**

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

வழங்குபவர்
கலாநிதி லீயோன் வெசல்ஸ்.

இவர் 30 வருடகால அரசியல் அனுபவமுடையவர். குறிப்பாக முரண்பாடு தீர்த்தல், சமாதானம் போன்ற விடயங்களில் அனுபவமும், அறிவு வளமும் நிறைந்தவர். தென் ஆபிரிக்க சமாதானப் பயணத்தின்போது, இடைக்கால அரசியல் யாப்புச் சபையின் பிரதித் தலைவராக விளங்கியவர்.

தற்போது, 1999 ஆம் ஆண்டிலிருந்து தென் ஆபிரிக்காவின் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவராகக் கடமையாற்றி வருகிறார்.

அந்நாட்டின் சமாதானத்திற்கு இவர் வழங்கிய பங்களிப்புக்காக மட்டுமல்ல, இவர் மதிக்கப்படுவது, மத்திய கிழக்கு, வட அயர்லாந்து போன்ற நாடுகளிலும் சமாதானப் பணிகளில் ஈடுபட்டு அனுசரணையாளராகவும் செயற்பட்டுள்ளார்.

பேருரை நேரம் :- காலை 10 மணி.
காலம் :- 31.05.2003 சனிக்கிழமை.
இடம் :- கேட்போர் கூடம்,
யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஏற்பாட்டாளர்:
யாழ்.கத்தோலிக்க மறை மாவட்டம்,
நீதி, சமாதான ஆணைக்குழு.
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
கொழும்பு-07.

அனுசரணையாளர்
வண.பிதா. அ.இ.பேணாட். (சி/968)



## சிறு விளம்பரம்

### பல் கட்டுதல்

பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்ல முறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம். *இல. 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.* (சி-948)

### தவறிவிட்டது

திருமகள் வீதி, அரியாலை யைச் சேர்ந்த செல்வகுருநாதன் சைபேஸ்வரி ஆகிய எனது விசேட அடையாள அட்டை மற்றும் நாட்குறிப்பேடுடன் கூடிய முக்கிய ஆவணங்கள் 27.05.2003 அன்று முகமாலைக்கும் மாம்பழம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (சி-969)



நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ்,
ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
இரகசியப் பொலிஸ் 115
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
CASTAWAY (இரவு 8.45) (சி-882)



ராஜா யாழ்ப்பாணம்.

3 வது வாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ் (சி-883)



புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30



## அன்னையின் பக்த கோடிகளே!



உங்கள் கரம்பொன் வேளாங்கண்ணி
யாத்திரை ஸ்தலத்தில் திருவிழா

எதிர்வரும் ஆனி மாதம் மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆசியும், 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் பூசைப்பலியும், அதன்பின் சொரூப பவனியும் நடைபெறும். அன்னையின் பக்தர்களே தவறாது கலந்து கொள்ளுங்கள்.

**கரம்பொன் பங்கு மக்களும் பங்குத் தந்தையும்.**

விளம்பர அனுசரணை:
அகில இலங்கை விநியோகஸ்தர்கள் (சி-967)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 09 - 12 - 1927 |  | 04 - 05 - 2000 |

**அமரர் சின்னத்தம்பி பொன்னுராஜா**

வருடங்கள் மூன்று ஆனாலும் - நீங்கள்
வைத்த பாசம் எமை விட்டுப் போகுமா?
உங்கள் ஆத்மா சாந்திக்காக - நாம்
தினமும் மலர் இட்டுப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள்:
மனைவி,
மகன் (சமரக்கொடி மாஸ்ரர்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*958/19 தலையாழி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (359)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு; வலியுறுத்தி பெரும் எழுச்சிப் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மக்களின் வாழ்விடங்களிலும், குடியிருப்புப் பகுதிகளுக்குள்ளும் நிலைகொண்டிருக்கும் படையினரை வெளியேறக்கோரியும் - இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதி வழங்கக்கோரியும், மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பான, சந்திப்பு ஒன்று நேற்று சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் நடாத்தப்படவுள்ள மேற்படி மக்கள் எழுச்சிப் போராட்டத்தை, அடுத்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் மிகவும் எழுச்சிபூர்வமாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுவருகிறது.

இது தொடர்பாக, நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெற்றது.

தமிழ் மக்களை துயரப்படுத்துகின்ற இராணுவ ஆக்கிரமிப்பு விலகவேண்டும் என்பதுடன், தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறாத நிலையிலுள்ள மக்கள் அகதிமுகாம்களில் அவல வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த அகதி முகாம்களில் உரிய வசதிகளின்றி அல்லற்பட்டு வருகின்ற மக்கள், தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியது அவசியம். எமது வீட்டிற்குச் சென்று நாம் வாழ வேண்டும். இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள பாடசாலைகள், மக்களின் வாழ்விடங்கள், வணக்கஸ்தலங்கள் போன்ற இடங்களிலிருந்து விலகிச்சென்று இயல்பு அமைதிநிலை திரும்புதலே எமது எதிர்பார்ப்பாகும். மக்களின் மனதிலிருந்து எழுந்த உணர்வுகளை வெளிப்படுத்தவே, ஒரு லட்சம் மக்களை ஒன்று சேர்க்கவிருக்கின்றோம் என்று அப்பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் கூறுகையில் :-

இராணுவ முகாம்கள் புதிதாக உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், இயல்பு வாழ்க்கை மீளத் திரும்புவதெனக் கூறமுடியாது. அரசு, புலிகள் இருதரப்பும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையை கொண்டுவர சர்வதேச சமூகம் பாடுபடவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வண.பிதா பேணாட் அடிகளார், வண.பிதா ஜெயக்குமார், மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரெட்ணம், முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோரும் கலந்து கொண்டனர் (ரா)

## காணாமற்போனோர் விசாரணை மீண்டும் இன்று ஆரம்பமாகிறது!

வட பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள், மீண்டும் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன. மேற்படி விசாரணைகளை நடத்துவதற்கு, முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான விசேட விசாரணைக்குழு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளது. இன்று காலைமுதல் மேற்படி விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளது. நாளை மானிப்பாயில் இவ்விசாரணைகள் இடம்பெறும்.

## இராணுவ புலனாய்வாளர்கள் மீது திருமலை நகரில் தாக்குதல்!

திருகோணமலை - உவர்மலை மத்திய வீதியில், நேற்று மதியம் 1.30 மணியளவில், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

மேற்படி இரண்டு நபர்களும், உவர்மலை பிளற்றன்பொயின்ற் இராணுவ முகாமிலிருந்து, மத்திய வீதி ஊடாகச் சென்று கொண்டிருக்கையிலேயே இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

கோப்ரல் சிசிரகுமார மற்றும் மகேந்திரன் என அழைக்கப்படும் மகேந்திரநாதன் ஆகியோரே தாக்குதலுக்கு இலக்கானவர்கள் ஆவர். இதில், மகேந்திரன் திருகோணமலை வைத்தியசாலையில், தீவிர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (10,04)

## கோட்டை...

அத்தோடு - மாடு இறந்த சில மணி நேரத்தில், பசுமாட்டினை மீட்க முயன்ற ஒருவரும் மின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இதன் பின்னர், மின்சாரம் நிறுத்தப்பட்டே இறந்த பசுமாடு மீட்கப்பட்டது. (சு)

## வாகனங்களை...

வுள்ளதாக, யாழ்.மாவட்டப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேலும், பதிவு ஆவணங்கள் உட்பட, அனைத்து ஆவணங்களினதும் மூலப்பிரதிகளை, வாகனம் ஓட்டுபவர் தம்முடன் எடுத்துச்செல்ல வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (க)

# செயற்படுத்த முடியாத விடயங்கள்...

எண்ணிக்கை 26,183 குடும்பங்களிலிருந்து 78,850 குடும்பங்களாக உயர்ந்துள்ளது.

இதேபோன்ற முன்னேற்றம் விவசாயத்திலும் ஏற்பட்டுள்ளது. காணிகளில் இருந்து மிதிவெடிகளை அகற்றிய பின்னர், விவசாயிகள் நிலங்களைப் பண்படுத்தி, பெரும் நெல் விளைச்சலையும் ஏனைய பயிர்களைப் பெருக்கியதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

நான் எனது முன்னைய நிலைக்கு போகுமிடத்து - கதையிலும் பார்க்க செயலில் இறங்குவது கடினம் எனவே தான் நாம் எவ்வாறு இருந்தோம். எவற்றைச் செய்துள்ளோம் என்பதைப் பரிசீலித்தோம். பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இயல்பு நிலைக்கு இட்டுச் செல்ல அநேகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கப்படுகின்றனவோ, அவ்வளவிற்கு அவை மறந்துவிடப்படுகின்றன.

ஒவ்வொரு புதிய தினங்களிலும், கடந்த 16 மாதங்களில் ஏற்பட்ட நன்மைகளின் விளைவு, மேலும் அதிகமான தேவைகளைக் கேட்க மக்களை இட்டுச்செல்கின்றது.

ரோக்கியோ மாநாடு அண்மிக்கையில், நாம் எமது வேறுபாடுகளைக் காட்டுவது - எமக்கு நன்மைகளைப் வசதிகளைப் பெருக்கி - முதலீட்டு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்தலாகும். வடக்கினதும் கிழக்கினதும் தேவைகளை நன்கு காணக்கூடியதாக உள்ளது. அவை உடனடியானதும் இடைக்காலத்தினதுமாகும். ஆனால், நாட்டின் தேவைகள் அனைத்தும் நீண்ட காலத்தை சார்பனவாகும். வடக்கினதும் கிழக்கினதும் நிலையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதில் ஏற்படும் பொறாமை மனப்பான்மை மாற்றப்படவேண்டும். இந்தப் போரானது, நாட்டின் ஏனைய பகுதிகளில் பல்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை வடக்கு-கிழக்கு மக்கள் உணரவேண்டும். அதேவேளை, தென்பகுதி மக்கள் தமது நிலைமைகளில் எக்குறைபாடுகள் இருப்பினும், வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதற்குப் பல அவசரத் தேவைகள் இருப்பதை உணரவேண்டும். நலிவடைந்த தெற்கு, வடக்கின் பொருளாதார மேம்பாட்டிற்கும், மேற்கின் வியாபார சமுதாயத்தின் முதலீட்டு முயற்சிகளுக்கும் இடையூறாக உள்ளதென்பதை உணரவேண்டும்.

எமது செயற்பாடுகள் எல்லோரும் நன்மை பெறக்கூடியவகையில், சகல பகுதிகளிலும் இயங்கவேண்டும். எனவேதான், இலங்கையின் மீட்புத்

பிரதேச ரீதியாகவோ வேறுபாடின்றி, எல்லா மக்களுக்கும் சேவை செய்கின்றது. அவர்கள் பாதிப்படைந்தால், நாம் எல்லோரும் சேர்ந்து அவர்களுடன் பாதிப்படைவோம். இதனை நாம் அனுமதிக்கமுடியாது.

எனவே, வருங்காலத்தில் எமக்குக் காத்திருப்பதென்ன? இவ்வாரம் மிகவும் நெருக்கடி மிகுந்த காலப் பகுதியாகும். இந்த இடைவெளியில், எங்களது போக்கினை மறுபரிசீலனை செய்தபொழுது எம்மையே நாம் சரிப்படுத்தியுள்ளோம். இதற்கு முன்னர் நடைபெற்றதெல்லாம் சரியானவை அல்ல. எதிர்காலத்தில் அவை அவ்வாறு அமையாதென நான் திடங்கொள்வேன். மக்களிடையே சக்தியை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது ஒரு பெரும் பரீட்சையாக அமைகின்றது. அதனால்தான் நாம் மீண்டும் 'சிறான்' இனை நாடிய பொழுது, அது தேவையுள்ள மக்களில் இருந்து வெகுதூரத்தில் இருப்பதைக் கண்டோம். குறுகியகாலப் பிரச்சினைகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்த ஓர் திட்டத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

வடக்கு - கிழக்குத் தேவைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவதற்கு, ஓர் அமைப்பை உருவாக்குவ

ஏற்படுத்தும் நோக்கோடு முன்னெடுத்துச் செல்லலாம் என நம்புகின்றேன்.

இருப்பினும், நான் மீண்டும் வலியுறுத்துவது என்னவெனில் - எனது பேச்சைத் தவறாக அர்த்தம் கொண்டு முனையுமிடத்து, இந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே தீர்வு எட்டப்படும். அல்லாது போனால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் - மக்களின் கருத்தை அறிந்துகொள்ளாமல் தீர்வு எடுக்கப்படமாட்டாது.

வடக்கும் கிழக்கும் எமக்கு மிகவும் முக்கியமானவை. அதற்கு அங்கு நிகழ்ந்த பாரிய அழிவும், அழிந்த உயிர்களும் முழுநாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்பட்ட சேதமுமே காரணமாகும். இன சமூகங்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் முக்கியமானதாகும். இதற்கு நீண்டகாலம் எடுப்பதுடன், அதற்கு எல்லோர் மட்டத்திலும் பொறுமையும் அவசியமாகும்.

இந்த அரசாங்கம் 16 மாதங்களுக்கு முன் பதவிக்கு வந்தபோது நாம் பலவீனப்படுத்தும் யுத்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. வீழ்ச்சியடையும் தறுவாயிலிருந்த ஒரு பொருளாதாரத்தை நாம் பெற்றோம். இதே கரிசனையுடன் அணுக வேண்டிய இன்னொரு பிரச்சினையும் எமக்கு இருக்கின்றது.

எந்தவொரு இலங்கையரையும் வினவினால், அவர்கள் ஜனநாயகம் முறை - எமது அரசியலை கீழ்த்தரமாக்கி, பதவியில் இருக்கும் எந்தக் கட்சியையும் ஈடாட வைத்துள்ளது. இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக, நாம் சில கண்ணியமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். எமது தொடர்புசாதனங்கள் முன்னைய விட சுதந்திரமாக இயங்குவதுடன், சட்டத்தில் தங்கியிருக்காது ஓர் தற்கட்டுப்பாட்டு முறையினை அமைக்கவும் முன்வந்துள்ளன. அதி நுண்ணிய நிறுவனங்களை அரசியல் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கும் முகமாக, அமைக்கப்படும் ஐந்து ஆணைக்குழுக்களும் விரைவில் வரவிருக்கின்றன. உலகில் இப்பிராந்தியத்தில் தகவல் பரிமாற்றச் சுதந்திரம் பற்றிய முதலாவது சட்டத்தை நாம் வரைந்துகொண்டிருக்கின்றோம்.

விடுதலைப் புலிகள், தாம் தனி நாடு கோரவில்லை என்ற கூற்றுக்கள் எமக்கு ஊக்கமளிக்கின்றன. பிளவுபட்ட நாட்டில் பல வருடங்களாக வசித்தபின், இரு சமூகங்களையும் ஒற்றுமைப்படுத்துவது முக்கிய குறிக்கோளாகும். எனது சமூகங்களிடையே உறவுகளைப் புனரமைக்க, விடுதலைப் புலிகள் தெற்கில் வெள்ளத்தினால் பாதிப்புற்றோருக்குச் செய்த உதவி மேலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

என. இத்திட்டங்கள் எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கப்படு கின்றனவோ, அவ்வளவிற்கு அவை மறந்துவிடப்படுகின்றன.

ஒவ்வொரு புதிய தினங்களிலும், கடந்த 16 மாதங்களில் ஏற்பட்ட நன்மைகளின் விளைவு, மேலும் அதிகமான தேவைகளைக் கேட்க மக்களை இட்டுச்செல்கின்றது.

ரோக்கியோ மாநாடு அண்மிக்கை யில், நாம் எமது வேறுபாடுகளைக் காட்டுவது - எமக்கு நன்மைகளைப் பயக்காது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளிலுள்ள எல்லா மக்களையும் கருத்திற்கொள் ளவேண்டும். தெற்கில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள அழிவு, பாரிய வறுமை, வசதியின்மை, தொழில் வாய்ப்புக் குறைவு போன்றவற்றிற்கு இட்டுச் செல்கின்றது. தெறகிலும் சரி, வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி ஏற்படுகின்ற விளைவுகள் - நாட் டின் ஏனைய பகுதிகளிலும் தாக் கத்தை ஏற்படுத்துகின்றது.

அரசாங்கம் என்ற வகையில், நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் அனைத்துக்கும் சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதுடன் 'இலங்கையின் மீட்பு' என்னும் பணிகளின் நோக்கங் களாவன - தொழில்வளத்தை மேம் படுத்தல், தாராளமனப்பான்மை மூலம் பொருளாதாரத்தை கட்டியெ ழுப்புதல், நிலைகொள்ளக்கூடிய இட்டுச் செல்வதற்குப் பல அவசரத் தேவைகள் இருப்பதை உணர வேண்டும். நலிவடைந்த தெற்கு, வடக்கின் பொருளாதார மேம்பாட்டிற் கும், மேற்கின் வியாபார சமுதாயத் தின் முதலீட்டு முயற்சிகளுக்கும் இடையூறாக உள்ளதென்பதை உணரவேண்டும்.

எமது செயற்பாடுகள் எல்லோரும் நன்மை பெறக்கூடியவகையில், சகல பகுதிகளிலும் இயங்கவேண்டும். எனவேதான், இலங்கையின் மீட்புத் திட்டம் - வறுமையை விரட்டியடிப் பதற்கான தகுந்த சூழ்நிலையை உருவாக்கும். இது, மக்களுக்கு சமூக நல சேவைகளை அளிப்பதன் மூல மன்றி, அவர்களின் சாதுரியத்தையும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்ப டுத்துவதிலும் முதலீடு செய்வதன் மூலம் நிகழும்.

எனவே, ரோக்கியோ மாநாடு சர்வதேச சமுதாயத்தின் உதவியை நாடுவதற்கு மட்டுமன்றி, நீண்டகால நிலையான அபிவிருத்தியை இத் தீவின் சகல பாகங்களிலும் வருங் காலத்தில் ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியமான முதலீட்டு சூழ் நிலையை ஏற்படுத்துவதற்கு முக்கிய மாகும்.

ரோக்கியோ மாநாட்டுக்குச் சக லரும் பங்குபற்றுவார்கள் என நான் நம்புகிறேன். எமது அரசாங்கம் இன ரீதியாகவோ, சமய ரீதியாகவோ, அமைகின்றது. அதனால்தான் நாம் மீண்டும் 'சிறான்' இனை நாடிய பொழுது, அது தேவையுள்ள மக்க ளில் இருந்து வெகுதூரத்தில் இருப் பதைக் கண்டோம். குறுகியகாலப் பிரச்சினைகளை சரியான முறை யில் நடைமுறைப்படுத்த ஓர் திட் டத்தை ஏற்படுத்த வேண்டியிருந் தது.

வடக்கு - கிழக்குத் தேவைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவ தற்கு, ஓர் அமைப்பை உருவாக்குவ தில் வெற்றிகண்டுள்ளோம் என நம்புகிறோம். புனரமைப்பு, புனர்வாழ்வு, நிவாரணம் ஆகியவற்றிற்கான குறு கிய, இடைக்கால திட்டங்களை மேற் கொள்ள இந்த அமைப்பு உறுது ணையாகும்.

நேரகாலங்கள் எல்லாம் முக் கியத்துவமானபடியாலும், நிர்வாக அமைப்பு இன்னமும் கட்டியெழுப்பப் படுகின்றபடியாலும் இத்தீர்வு பல் லின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அமையும். எல் லாம் வெளிப்படையான முறையில் உருவாக்கப்படும். போரினால் பாதிக் கப்பட்ட அநேக மக்களின் கருத்துக் கள், விருப்புரைகளின் அடிப்படையி லேயே இது அமையும்.

பாரம்பரிய முறையிலான அமுல் படுத்துதலில் நாம் தங்கியிருக்க வேண்டியதில்லை. அதிலும் பார்க்க உலகளாவிய ரீதியில் உள்ள புத்தி மான்களான - வைத்தியர்கள், பொறி யியலாளர்கள், திட்ட முகாமையா ளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப்பெற்று, துரித அமுலாக்கத்தினை துரிதமாக்கு வோம். இந்த நிபுணர்கள் தமது திறமைகளைக் கொணர்ந்து இங்கு பயன்படுத்துவார்கள் என நம்புகின் றேன்.

இவற்றினை மனதிற்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர, இத்தீவின் மக்கள் அனை வரும் தத்தமது வாழ்க்கையை கொண்டு நடாத்தக்கூடிய வகையில் அமையும் சமஷ்டி ஆட்சி முறையை எல்லோர் மட்டத்திலும் பொறுமை யும் அவசியமாகும்.

இந்த அரசாங்கம் 16 மாதங்க ளுக்கு முன் பதவிக்கு வந்தபோது நாம் பலவீனப்படுத்தும் யுத்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. வீழ்ச்சியடையும் தறுவாயிலிருந்த ஒரு பொருளாதாரத்தை நாம் பெற் றோம். இதே கரிசனையுடன் அணுக வேண்டிய இன்னொரு பிரச்சினையும் எமக்கு இருக்கின்றது.

எந்தவொரு இலங்கையரையும் வினவினால், அவர்கள் ஜனநாயகம் தகுந்த முறையில் இயங்கவில்லை எனக் கூறுவார்கள். இனரீதியாக அர சியலை மையமாகக் கொண்டு கசப்புணர்வு, போட்டி மற்றும் என்றும் காணாத விதத்தில் மக்களிடையே கட்சிப்பூசல் ஏற்பட்டுள்ளது. எமது நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்கு, இந்த வேற்றுமைகளை நாம் மாற்றி யமைக்கவேண்டும். ஒரு கொள்கை சம்பந்தமாக அல்லது தவறான செயலையோ திறமையின்மை யையோ ஒழிப்பதில் கருத்து முரண் பாடு ஏற்படுவது ஒரு விடயம். அதி காரத்தைக் கைப்பற்றும் நோக்கு டன் எதிர்ப்பது இன்னொரு விடயம்.

இவ்வாறான சுயநல அணுகு

விடுதலைப் புலிகள், தாம் தனி நாடு கோரவில்லை என்ற கூற்றுக் கள் எமக்கு ஊக்கமளிக்கின்றன. பிளவுபட்ட நாட்டில் பல வருடங்க ளாக வசித்தபின், இரு சமூகங்க ளையும் ஒற்றுமைப்படுத்துவது முக் கிய குறிக்கோளாகும். எனது சமூ கங்களிடையே உறவுகளைப் புனர மைக்க, விடுதலைப் புலிகள் தெற் கில் வெள்ளத்தினால் பாதிப்புற்றோ ருக்குச் செய்த உதவி மேலும் ஏற் பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட் டுகின்றது.

இருவருடத்திற்கு முன், இப்பேர்ப் பட்ட நிகழ்ச்சியை நாம் கேள்விப் பட்டிருக்க முடியாது. ஆகையால், நாம் இதையொரு குறிப்பிடத்தக் கதும் முக்கியமானதுமான சைகை யாகக் கருதுகின்றோம்.

ஒரு ஒற்றுமையானதும், சமாதா னதமானதும், பொறுமையானதுமான தேசத்தைக் கட்டியெழுப்பும் பணி- இறுதியில் ஆரம்பமாகிவிட்டதை இது விளக்குகின்றது. அண்மையில நடந்த பின்னடைவின் மத்தியிலும், வருங்கா லத்தில் நம்பிக்கையூட்டும் பல சந் தர்ப்பங்கள் காத்திருக்கின்றன என நான் நம்புகின்றேன் என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.




## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.94 | 97.40 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.32 | 159.64 |
| 1 யூரோ | 113.56 | 114.70 |
| 1 சுவிஸ் பிராங். | 74.25 | 75.43 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.58 | 63.50 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.